Regd No M. 1900. 16-பக்கங்கள்.

# குடி அரசு

ESTD. 1924

உள்நாடு வருட சந்தா ரூ. 7-0-0. தனிப்பிரதி 0-2-0.
வெளிநாடு ,, ரூ. 9-0-0. ,, 0-2-6.

மாலை 22 } ஈரோடு 9-10-1948 சனிக்கிழமை } மலர் 5.

## விரைந்து வாரீர்!

★

பொன்னான தமிழ்மானம் போக்க வென்றே
பொழுதெல்லாம் திட்டமிட்டு வேலை செய்யும்
பன்னாடை, முருங்கைமிலா ரிவைக ளெல்லாம்
பைந்தமிழ நாட்டமைச்சுப் பதவி ஏற்றால்
என்னாகும் தமிழ்மானம் இறப்ப தல்லால்?
இறவாத தமிழ்மான மிறப்ப தேயோ?
தன்மான இளைஞர்களே! எழுவீர்! நந்தம்
தாய்மொழியைக் காத்திடற்கு விரைந்து வாரீர்!

அருந்தமிழ மக்களிடம் வரியாய் வாங்கி,
அளவற்ற பொருள்குவித்தார்! அவற்றை யெல்லாம்
ஒருசிறிதும் தமிழ்வளர்க்க உதவி டாமல்,
ஊதாரி மொழிவளர்க்க அப் பணத்தை
விரையம்செய் கின்றார்கள்! மேலும் நம்மை
விலங்குகளாய் நடத்துகிறார்! அய்யகோ நம்
அருந்தமிழைக் காக்கவெனில் தமி ழிடத்தே
அன்புள்ள தொண்டரெலாம் விரைந்து வாரீர்!

செந்தமிழே அமிழ்தமென நாளும் செப்பும்,
செய்யதமிழ்ப் புலவர்களே! உணர்வை மாய்க்க
எங்கெந்த வகையினிலோ திட்டம் செய்து
'இம்'மென்ன உரிமையிலை என்கின் றாரே!
கொந்தளிக்கும் தமிழ்ப்புலவீர்! தமிழைத் தீயர்
கொன்றழித்தால் நம்வாழ்வு சிறப்ப தாமோ?
செந்தமிழைக் காத்திடுவோம்! நீவி ரெல்லாம்
சேர்ந்தொன் றாய்க் களநோக்கி விரைந்து வாரீர்!

—சாமி பழனியப்பன்.

சிறுவர் பகுதி.

# கழுதையின் சமாதி.

"தாதா"

ஒரு ஊரிலே ஒரு மாதா கோவிலிருந்தது. அக்கோவிலின் வரும்படியில், ஒரு வயோதிகப் பாதிரியார், ஒரு வாலிபப்பாதிரியார், ஒரு கழுதை ஆக மூன்று சீவன்கள் வயிறு வளர்த்து வந்தன.

கொஞ்ச காலத்திற்குப்பிறகு, அக்கோவிலின் வரும்படி குறைந்து கொண்டே வந்ததால், அம்மூன்று சீவன்களின் பிழைப்புக்கும் நெருக்கடியான நிலைமை ஏற்பட்டது.

ஒரு நாள் முதலாவது சீவனாகிய வயோதிகப்பாதிரியார் இரண்டாவது சீவனாகிய வாலிபப்பாதிரியாரை நோக்கி, 'ஓ! வாலிபரே! எப்படியோ இவ்வளவுகாலமாக மாதா கோவிலின் வரும்படியில் நாம் வாழ்ந்து விட்டோம்! இப்போதோ வரும்படி மிகவும் குறைந்து விட்டது. இனி இக்கோவிலையே நம்பினோமானால், நம் கதி அதோகதியாகி விடும். ஆகையால் நீர் மூன்றாவது சீவனாகிய நமது கழுதையை ஓட்டிக்கொண்டு எங்கேயாவது போய்ப் பிழைத்துக் கொள்ளும். நான் மட்டும் இன்னும் கொஞ்ச நாள் இங்கேயே இருந்து பார்க்கிறேன்.' என்றார்.

நிலைமையை உணர்ந்த வாலிபப் பாதிரியார், வேறு வழியின்றி மாதா கோவிலை விட்டுக் கழுதையை ஓட்டிக்கொண்டு ஊர் ஊராய் அலைந்து திரிந்தார். ஒரு தொழிலும் கிடைக்கவில்லை.

என்ன செய்வார் பாவம்! வாலிபப்பாதிரியார் வயிற்றுக்கேபோதிய உணவு கிடைக்காமல் திண்டாடும் போது கழுதைக்கும் சரியான உணவு கொடுத்துக்காப்பாற்ற அவரால் எப்படிமுடியும்? கடைசியாக, கழுதையும்மெலிந்து வழியில் நடக்கக்கூடச் சக்தி இல்லாமல் கால் இடறிக் கீழே விழுந்ததும் செத்துப் போய் விட்டது.

அப்போது, வாலிபப் பாதிரியார் மிகமிக வருந்தினார். தனது கடைசிக் கைமுதலாக இருந்த கழுதையும் செத்துப்போகவே, தனக்கேற்பட்ட வறுமையின் கொடுமையை நினைத்துக் கண்ணீர் கொட்டிக் கதறி அழுதார்.

வறுமையால் வருந்துபவர்களுக்குத்தானே திருட்டுப்புத்தி உண்டாகிறது! அதுபோலவே வாலிபப்பாதிரியாருக்கும் ஒரு சூழ்ச்சி உதயமாகி விட்டது.

உடனே, அங்கேயே கழுதையின் சவத்தைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டு, அவ்வழியே செல்லும் வழிப்போக்கர்களிடம் 'ஓ! மகாஜனங்களே! இங்கு ஒரு மகான் சமாதி ஆகியிருக்கிறார். இவருக்குக் கோவில் கட்டுவதற்காக உங்களால் இயன்ற தர்மம் கொடுங்கள்! உங்களுக்கு மிகவும் புண்ணியம் உண்டாகும்!!' என்று பல தினங்களாகத் தொடர்ந்து கேட்டுக்கொண்டே இருந்தார்.

அந்த வாலிபப் பாதிரியார் எதிர்பார்த்தபடியே நாளடைவில் அதிகப் பணம் குவிந்துவிட்டன. அதில் கொஞ்சம் செலவு செய்து அங்கோர் புதிய மாதா கோவிலும், அதற்கு அருகிலேயே தனக்கோர் மாடிவீடும் கட்டிக்கொண்டு மிகவும் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தார்.

பிழைக்கும் வழியைக் கற்றுக் கொண்ட வாலிபப் பாதிரியாரின் சூழ்ச்சியினால் தோன்றிய புதிய மாதா கோவில் உலகப் பிரசித்தி பெற்று விளங்க ஆரம்பித்து விட்டது.

அதைக் கேள்விப்பட்டு, வயோதிகப் பாதிரியார் ஒரு நாள் புதிய மாதா கோவிலைப் பார்க்க வந்தார். அங்கு, புதிய மாதா கோவில் அதிகாரியாக இருக்கும் பழைய வாலிபப் பாதிரியாரைக் கண்டதும் ஆச்சரியத்தால் அப்படியே திகைத்து நின்றுவிட்டார்.

பிறகு, வாலிபப் பாதிரியார் அந்த வயோதிகப் பாதிரியாரை அழைத்துக்கொண்டுபோய்த் தன் மாடி வீட்டையும், அதிலுள்ள செல்வங்களையும் காட்டி மகிழ்ந்தார். 'இவ்வளவு செல்வங்களும் உமக்கு எப்படிக் கிடைத்தன?' என்று வயோதிகப் பாதிரியார் வியப்புடன் கேட்டார்.

'கழுதையின் சமாதி' என்று சுருக்கமாகப் பதில் சொல்லிவிட்டுச் சற்று பெருமையோடு நிமிர்ந்து வயோதிகப் பாதிரியார் முகத்தை வாலிபப் பாதிரியார் பார்த்தார். பிறகு, தான் செய்த சூழ்ச்சி முழுவதையும் விளக்கமாகக் கூறி, 'என்ன இருந்தாலும், வாலிபர்! வாலிபர்தான்!!' வயோதிகர்களுக்குச் சமய சந்தர்ப்பம் போல் மூளை வேலை செய்யாது' என்று கூறினார்.

வயோதிகப் பாதிரியார் அதைக் கேட்டுச் சிரித்துக்கொண்டே வாலிபப் பாதிரியாரிடம் 'ஓ! வாலிபரே! வயோதிகர் மூளை இம்மாதிரிக் காரியங்களில், வாலிபர் மூளையை விட மிகவும் சிறப்பாக வேலை செய்யும் என்பதை நீர் இன்னும் தெரிந்து கொள்ளாதிருக்கிறீர்! நான் இது வரையில் உம்மைப் போல் யாரிடமாவது நமது பழைய மாதாகோவிலின் உண்மை வரலாற்றைக் கூறியதுண்டா?' என்றார்.

வாலிபப் பாதிரியார் ஆச்சரியத்தோடு பழைய மாதாகோவிலின் உண்மை வரலாறு என்ன? என்று கேட்டார்.

'நீர் ஓட்டிக்கொண்டு வந்த கழுதையின் தாயைத்தான் அங்கே புதைத்து அத்தனைகாலமும் வாழ்ந்து வந்தோம்? என்றார் வயோதிகப் பாதிரியார்.

சிறுவர்களே! மக்கள் மனதில் கொண்டுள்ள மூடநம்பிக்கைகளுக்கும், கோவில் சமாதி முதலானவைகளுக்கும் இடையே உண்மை இல்லை என்பதை இம்மாதிரி மேல் நாட்டுக் கதைகளிலிருந்து நீங்கள் தெளிவாக உணரலாம்!

★

## பெரியார் விழா.

சீர்காழி திராவிட மாணவர் கழகச் சார்பில் 26—9—48ம் நாள் தோழர் தாமோதரன் தலைமையில் பெரியாரின் 70வது பிறந்தநாள் விழா கொண்டாடப்பெற்றது.

4000 மக்கள் கூடிய அக்கூட்டத்தில், கல்லெறியும் கண்ணியவான்களின் செயலைப் பொறுமையோடு மக்கள் ஏற்றுக்கொண்டிருந்தது போற்றுதற் குரியது.

தளபதி கே. வி. அழகிரிசாமி அவர்களின் உருக்கமான 2 மணிநேரப்பேச்சு மக்களிடையே நல்ல உணர்ச்சியை வளர்த்திருக்கிறது.

தோழர் மாணவமணியின் பேச்சுக்குப்பிறகு தலைவர் முடிவுரை கூற வாழ்த்தொலியோடு கூட்டம் கலைந்தது.

ஓ. நி.

ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

# தேசீயக்கீத விளக்கம்.

★

''ஆரியராவது, திராவிடராவது. ஆரியர், திராவிடர் என்பது அரசியல் ஆதிக்கம் பெறும் சூழ்ச்சிப் பேச்சு. பிரிவினை உணர்ச்சி கூடாது. 'நாமெல்லோரும் இந்தியர்' என்னும் ஒற்றுமை உணர்ச்சியை மாணவர்களுக்கு ஊட்ட வேண்டும். 'திராவிடர், திராவிட நாடு' என்பதெல்லாம் தேசிய ஒற்றுமையைச் சீர்குலைக்கும் செயலாகும்,'' என வாய்ப்பறை சாற்றி வரும் நமது சென்னை அரசியலார், இவ்வாண்டு திருத்தியமைக்கப்பட்ட கல்வித் திட்டத்தில், 'தேசீயக் கீதங்கள்'' என, வந்தே மாதரம், மாதாவின் துவஜம், புது வருஷம் என்னும் பாரதியார் பாடல்கள் மூன்றும், ஜனகணமன என்னும் தாகூர் பாடலொன்றும் குறித்துள்ளார்கள். அந்நான்கு பாடல்களும் தனியாக அச்சிட்டு அரை அணா விலைக்கு, பள்ளி மாணவர்களெல்லார்க்கும் விற்கப்பட்டுள்ளது. சில பள்ளிகளில் ''ஜனகணமன'' என்னும் பாடலும், இரண்டடிகளும், ஈற்றடியுந்தான் பாடவேண்டுமென்பதைப் பொருட்படுத்தாமல், பெரும்பாலான பள்ளிகளில் ''வாழிய செந்தமிழ்'' என்னும் பாடலும் பாடப்பட்டு வருகின்றன.

'ஆரியர் திராவிடர் என்னும் பிரிவு வேற்றுமை இன்றில்லை' என்று வாய் வலிக்கச் சொல்லி வருவோரால்தேர்ந்தெடுக்கப்பட்ட பாட்டுகளிலேயே, ஆரிய திராவிட வேற்றுமைக்கு ஆதாரந்தரப்பட்டுள்ளது. இதோ அவ்வாதாரம்;

''பஞ்சாப சிந்து குஜராட மராட்ட
திராவிட உத்கல வங்க''
(ஜனகணமன 2வது அடி)

''ஆரியபூமியில் நாரியரும் நர
சூரியரும்சொல்லும் வீரிய
வாசகம்''
(வந்தேமாதரப் பாட்டு)

''அணியணியாயவர் நிற்கும்-இந்த
ஆரியக் காட்சியோ ரானந்த
மன்றோ?''
(தாயின் மணிக்கொடி)

''ஆரிய நாட்டினர் ஆண்மையோ
டியற்றும்
சீரிய முயற்சிகள் சிறந்துமிக்
கோங்குக''
(வாழிய செந்தமிழ்)

இவையெல்லாம் என்ன? திராவிட இனவுணர்ச்சியால் துடித்துக் கொண்டிருக்கும் தமிழ் மாணவர்களுக்கு அரசியலார் கொடுக்கும் நெருப்புப்பந்தங்களன்றோ? இப்பாடல்களென்ன திராவிடப் புலவர்களால் பாடப்பட்ட பாடல்களா? உலக கவியாலும், தமிழ் நாட்டுத் தேசீயக்கவியாலும் பாடப்பட்ட பாடல்கள்தானே? இவ்வளவு சான்றுகளை வைத்துக் கொண்டு 'ஆரியர், திராவிடர் என்பது அரசியல் புரட்டு' என்பது எவ்வளவு வடிகட்டின புரட்டு! ஆரிய திராவிட ஆதாரப்பாட்டுக்களைப் பள்ளிப்பிள்ளைகளுக்குப் பாடமாக வைத்து விட்டு, ஆரியர் திராவிடர் என்னும் வேற்றுமையுணர்ச்சியை உண்டாக்கக்கூடாது என்பதன் பொருள் நமக்கு விளங்கவில்லை.

தென்னாட்டைத் திராவிடநாடு என உலக கவி தாகூர் கூறிய உண்மையை இதுநாள் வரை எந்தத் தேசியத் தலைவரும் மறுக்கவில்லை. ஒப்புக்கொண்டே அப்பாட்டைத் தேசீயக்கீதமாகவும் கொண்டுள்ளனர். இதுதான் உலகத்துக்கேற்ற தேசீயப் பாடலென்கிறார் நேரு.

''ஆரியபூமி'' எது ஆரிய பூமி? ஒரு காலத்தே இமயமுதல் குமரி வரை தமிழகமாக இருந்ததேயன்றி, திராவிட நாட்டை எப்போது ஆரியர் வென்று அடிப்படுத்தினர்? ஆங்கிலர் ஆட்சியிலுங்கூட வடநாடு, தென்னாடு எனத் தனித்தே இருந்த திராவிட நாட்டையும் சேர்த்து 'ஆரியபூமி' என்பது எவ்வாறு பொருந்தும்? இதைத் 'திராவிடநாடு திராவிடருக்கே' என முழக்கமிடும் மாணவர்கள் வெறுப்பதைத்தவிர, வேற்றுமையுணர்ச்சியால் நரம்பு முறுக்கேறுவதைவிட, எவ்வாறு பொறுத்துக் கொண்டிருப்பர்?

இந்திய வீரர்கள் கொடிமரத்தைச் சூழ்ந்து நிற்கும் காட்சியை ''ஆரியக் காட்சியோர் ஆனந்த மன்றோ?'' என்கிறார் பாரதியார். எப்படிச் 'செந்தமிழ் நாட்டுப் பொருநர், சேரன்றன் வீரர், தெலுங்கர், துளுவர், கன்னடர் எல்லாம் ஆரியரானார்களோ நமக்கு விளங்கவில்லை.

ஆரியர்களைக் கூறும்போது,

''பொன்னகர்த் தேவர்கள் ஒப்ப—
நிற்கும் பொற்புடையாரிந்து
ஸ்தானத்துமல்லர்'' என்கிறார்.

தேவர்களின் திறமையே திறமை! 'உஸ்' என்றால் விழுந்தடித்துக் கொண்டு ஒன்பதுகல் ஓடும் இயல்பினர். சருகு சரக்கென்றால் அரக்கர் வருகிறாரென்று விருக்கென்னும் திடநெஞ்சர். அச்சமும், தோல்வியும் அடைக்கலத் தொழிலுமே தங்குலத் தொழிலாகக் கொண்டவர். எதிர்நின்று பொரத்திறமையற்ற ஆரியரைத்தேவர்களுக் கொப்பிட்ட பாரதியாரை நாம் பாராட்டுகின்றோம். இவ்வாறு வடவாரியரைச் சிறப்பித்துக் கூறும் பாட்டைத்தமிழ்ச் சிறுவர்கள் எங்ஙனம் பாடுவர்? பாடுவதை எவ்வாறு கேட்டுக் கொண்டுதானிருப்பர்? மேலும், இக்கொடிப்பாட்டு,

''இந்திரன் வச்சிரம் ஓர்பால்—
அதில் எங்கள் துருக்கர் இளம்
பிறை ஓர்பால்'' என,

காந்தியடிகள் தன்னாட்சிக் கட்சிக்குள் நுழைவதற்குமுன், ராட்டினம் பொறிக்கப்படாமுன், காவித்துணியில் ஒருபக்கம் கத்தியும், மற்றொரு பக்கம் பிறைத்திங்களும்பொறிக்கப்பட்டிருந்தபோது பாடியபாட்டாகும். இப்பாட்டு, இன்றுள்ள அசோகச்சக்கரம் பொறித்த கொடிக்கு எங்ஙனம் பொருந்தும்? இன்றுள்ள கொடிக்கேற்றவாறு பாடத் தமிழ் நாட்டில் புலவர்கள் இல்லையா என்ன? மேலும், அக்காலத்தே ஆரியர்கள் தந்திரமாகத் தங்கள் தலைவனாகிய இந்திரனுடைய வச்சிராயுதத்தைத் தன்னாட்சிக் கொடியில் அமைத்து விட்டனர். இதை உள்ளுணர்ந்துதான் காந்தியடிகள் விலக்கினர்போலும்! தேசீயக்கொடியில் இந்திரன் வச்சிரம் ஏன் பொறிக்கப்படவேண்டும்?

இனி,

''ஆரிய நாட்டினர் ஆண்மையோ
டியற்றும்
சீரிய முயற்சிகள் சிறந்துமிக்
கோங்குக''

என்னும் அடிகளை இனவுணர்ச்சியுள்ள எந்தத் தமிழ் மாணவனும் மனமாரப்பாடவே மாட்டான்; கேட்கவுமாட்டான். ஒழுங்குமுறைக்கஞ்சி மனப்புழுக்கத்தோடு கேட்டுக்கொண்டிருக்கின்றனர் பாவம்! உயிரை

(தொடர்ச்சி 14ம் பக்கம்)

கதை கற்பனை.

சிறுகதை

இரண்டாம் பருவம்

# பிரிந்தது குற்றமா?

போட்டி

எண் 4.

சந்திராவுடன் நான் நெருங்கிப் பழகிய பின்னர்தான் அவள் பார்ப்பனப் பெண் என்று எனக்குத் தெரிந்தது. அப்போது அவள் உயர்நிலைப்பள்ளியொன்றில் ஆசிரியையாக இருந்தாள். அவளுடைய முதல் சந்திப்பே காதலாக மாறுமென்று நான் நினைக்கவே இல்லை.

என்னுடைய அறைக்கு சந்திரா அடிக்கடி வந்து செல்வாள். திராவிடக்கழகத்தின் கொள்கைகள் நாட்டிலே தீவிரமாகப் பரவி வருகிறதென்று என்னுடன் பழகிய பின்னர்தான் அவளுக்குத் தெரிந்திருக்க வேண்டும். எப்பொழுதும் 'விடுதலை', 'குடியரசு' படித்துக்கொண்டிருக்கிறீர்களே, அவைகளிலே என்ன இருக்கிறதுஎன்று ஆச்சர்யமுடன் வினாவுவாள். நம் போன்ற இளங் காதலர்களது வாழ்வையும், இந்நாட்டு மக்களுடைய வாழ்க்கையையும், செப்பனிடும் தாள்கள் அவைகள் எனப்பதிலளிப்பேன். கல்கியிலே இவ்வாரம் ஒரு காதற் கதை வந்திருக்கிறதே, அது எவ்வளவு அருமையாக இருக்கிறது படித்தீர்களா, என்று புத்தகத்துடன் வருவாள். "மாந்தோப்பில் மணம்" என்ற பாரதிதாசன் கவிதையிலே காதல் எவ்வளவு அருமையாக சித்திரித்துக் காட்டப்பட்டிருக்கிறது, பார்த்தாயா என்று படித்துக் காட்டுவேன். கலப்பு மணம், சீர்திருத்த விவாகம், உயர் சாதி மக்களின் சூழ்ச்சி முதலியவைகளைப் பற்றி அவளுக்கு விளக்கமாகக் கூறுவேன். அவளும் 'விடுதலை', 'குடியரசு' போன்ற இதழ்களைப் படிப்பாள். நாங்கள் சந்திக்கும்போதெல்லாம் அரசியல் விஷயங்களைப்பற்றியும், ஆண்டவன் பேரால் மக்களை ஏமாற்றிப் பிழைக்கும் கூட்டத்தைப்பற்றியும் உரையாடுவோம். இடையிடையே காதற்பேச்சும் பேசாமல் இருக்க மாட்டோம். இவ்விதமாக எங்கள் சந்திப்பு சின்னாட்கள் இருந்தது.

சந்திராவுடன் நான் தொடர்பு கொண்டிருந்தது எப்படியோ என் நண்பர்களுக்குத் தெரிந்தது. "பார்ப்பனன் கூடாது. பார்ப்பனத்திகள் மட்டும் வேண்டுமாம்" என்று கேலி செய்வர். பார்ப்பனர்கள் கூடாது என்று நாங்கள் சொல்ல வில்லை; பார்ப்பனீயத்தைத் தான் வெறுக்கிறோமே ஒழிய எந்த தனிப்பட்ட பார்ப்பனனையும் விரோதித்துக் கொள்வதில்லை. பார்ப்பனீயம் பார்ப்பனர்களிடத்தில் மட்டும் தான் இருக்கிறது என்று நாங்கள் வாதாடவில்லை, அது திராவிடர் இனத்திலேயும் இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது; அதையும் கண்டிக்கிறோமென்று விளக்கம் கூறுவேன். சந்திரா என்னுடன் கருத்து வேற்றுமையால் பிணக்குக் கொள்ளும் போதெல்லாம் நான் உடைந்த உள்ளத்துடன் இருப்பேன். அப்பொழுது என்னை சந்திக்கும் நண்பர்கள் 'காதல் முறிவா' என்று கிண்டல் செய்வார்கள். இவ்விதமாக சந்திராவின் காதல் ஒரு புறமும் நண்பர்களின் கேலியும் கூத்தும் ஒரு புறமுமாக எனது வாழ்க்கை ஓடிக கொண்டிருந்தது.

தீவிர சுயமரியாதைக்காரன், நான், என்று தெரிந்து கொள்ள அவளுக்கு அதிக நாட்கள் ஆகவில்லை. ஆண்டவனைப் பற்றிப் பேசும் போதும், அவளினத்தின் ஆணவச்செய்கைகளைக்கண்டிக்கும் போதும் என்னுடன் கருத்து மாறுபாடு கொள்ள ஆரம்பித்தாள். 'விடுதலை,' 'குடியரசு,' போன்ற இதழ்களைப் படிப்பதில் அவளுக்கு அதிகமாக விருப்ப மில்லாததை உணர ஆரம்பித்தேன். காந்தியார் கொலையுண்ட சம்பவத்தை விடுதலையில் படித்துவிட்டு ஒன்றுமே, அன்று, என்னிடம் பேசவில்லை. நாட்கள் ஆக ஆக என்னை வெறுக்க ஆரம்பித்தாள்.

'குத்தூசியின்' "பலசரக்கு" மூட்டையை"யும் 'விடுதலை' தலையங்கத்தையும் படிக்கும் போது அவள் முகம் மாறுபடும். காதலர்கள் என்றால் கருத்தொருமித்து அல்லவா இருக்கவேண்டும்? எவ்விடத்தில் சூழ்ச்சியும் வஞ்சகமும் இருப்பினும் அதைக் கண்டிப்பது தானே உண்மையான சீர்திருத்த வாதிகளின் நோக்கமாக இருக்கவேண்டும்? அதை விட்டு இவள் ஏன் தன்னினத்தின் வஞ்சகமான சூழ்ச்சியைத் தாங்கிப் பிடிக்கவேண்டும் என்று அடிக்கடி எண்ணுவேன். பட்டம் பெற்றவள், அதுவும் ஒரு ஆசிரியை, ஏன் உயர் சாதி எண்ணங்கொண்டவளாக இருக்க வேண்டுமென்று எனக்கு வியப்பாக இருக்கும். ஆரம்பத்திலே கருத்து மாறுபாடுடையவர்கள் கலப்பு மணத்திற்குப் பிறகு எங்ஙனம் ஒன்றியைந்து வாழ்க்கைத் தோணியைக் கடத்துவர் என்று கவலை கொள்ளலாயினேன். அலுவலகத்திலே வேலை ஓடாது. சுருங்கக்கூறினால் எனது வாழ்க்கையிலே புயல் வீச ஆரம்பித்தது. நான் கட்டிய மனக்கோட்டைகளெல்லாம் தகர்த்தெறியப்படலாயின. "சந்திரா! நீயும் நானும் இரண்டு துருவங்கள். இரு துருவங்கள் ஒன்றுபடுவதை நீ எங்கேயாவது பார்த்திருக்கிறாயா" என்று மனதிற்குள்ளாகவே சொல்லிக்கொள்வேன்.

எங்களுக்குள் நிரந்தரமான பிளவை ஏற்படுத்த, அண்ணாவின் 'சந்திரமோஹன்' நாடகம் வந்தது. 'சந்திரமோஹன்' சரிதம் தழுவிய கற்பனைக் கதை என்று விளம்பரப்படுத்தப்பட்டிருந்தது. சந்திராவுடன் சேர்ந்து அதனைப் பார்க்க வேண்டுமென்று விரும்பினேன். 'அண்ணாவின்' கற்பனைத்திறத்தையும் கதையின் அமைப்பையும் அவள் பார்க்கவேண்டுமென்று எனக்கு விருப்பம். அண்ணா சிறந்த எழுத்தாளர், நாடக ஆசிரியர், என்று அவள் கேள்விப்பட்டிருக்க வேண்டும். இல்லையென்றால் 'வேலைக்காரி'யைப்பற்றியும் 'ஓரிர'வைப்பற்றியும் அவ்வளவு பெருமையாகப் பேசியிருக்க மாட்டாள். ஆகையால் இக்கதையும் பிடிக்குமென்று அவளை அழைத்தேன். அவளும் ஒப்புக்கொண்டாள். இருவரும் சென்றோம். கதை ஆரம்பத்திலேயே நன்றாக இருந்தது. மராட்டிய மண்டலத்தை மொகலாய அரசரிடமிருந்து விடுவித்தது, மராட்டிய மக்களை மாவீரர்களாக்க சிவாஜி எடுத்துக்கொண்ட முயற்சி—இவைதான் கதையின் முற்பகுதி. சந்திரா கதையை நன்றாக ரஸித்தாள். கண்ணிழந்த தேலோஜியும் காலிழந்த லோகோஜியும் உரையாடிக்கொள்ளுகிறார்களே, அதிலே கருத்து எவ்வளவு பொதிந்திருக்கிறது, கவனித்தீர்களா என்று கூறினாள். நானும் ஆமாம் என்றேன். அதை எவ்வளவு உன்னிப்பாகக் கவனித்து இருக்கிறாள் என்பது குறித்து எனக்கு மகிழ்ச்சி.

கதையின் இரண்டாவது பகுதியில் தான் கருத்து நிரம்பியிருந்தது. சிவாஜி பட்டம் சூட்டிக்கொள்ள வேண்டுமென்று மராட்டிய மண்டலம் விரும்பியது. சாத்திரத்தைக்காட்டி சூத்திரன் பட்டம் ஏற்கக்கூடாது எனறு பார்ப்பனர்கள் கூறித் தடுத்தது. கங்குப் பட்டர் போன்ற பார்ப்பனர்களால் சிவாஜி அழிந்துபட்டது, மராட்டிய மண்டலம் சிதைந்தது—இவைதான் கதையின் பிற்பகுதி. அண்ணாவின் கற்பனைத் திறமை இப்பகுதியில்தான் அடங்கியுள்ளது. பார்ப்பனீயம் இந்

(தொடர்ச்சி 13-ம் பக்கம்)

ஜா... நூலக அறக்கட்டளை

# அமைச்சர் தமிழ் வளர்க்கும் அழகு!

1949ம் ஆண்டு தேர்வுக்குரிய ஆறாம்படிவம் தமிழ்ப்பாடத் திட்டத்தில்காணும், உரைநடைப்பகுதியில்பத்துக் கட்டுரைகளிருக்கின்றன. அவற்றுள் அறிவாற்றல்மிக்க கல்வியமைச்சர் [கனம்] தி. சு. அவிநாசிலிங்கம் செட்டியார் வழக்கறிஞர் பி.ஏ.பி.எல். அவர்கள் எழுதிய "எதிர்கால இந்தியா" என்னுங்கட்டுரையும் ஒன்றாக மிளிர்கிறது. உரிமையாளரின் இசைவு பெற்றே அது சேர்க்கப்பட்டுள்ளது. இதற்கு முந்திய கட்டுரைகளான நாவலர் புலவர் ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் எழுதிய "வீரச்சுவை" அண்ணாமலைப் பல்கலைக்கழக வரலாற்றாசிரியர் ச. க. கோவிந்தசாமிப் பிள்ளை எம். ஏ. அவர்கள் எழுதிய 'பண்டைத் தமிழரின் அரசியல்" என்ற இரண்டு கட்டுரைகளும் உண்மைத்தமிழனின் இரு விழியாகவிளங்குகின்றன. தெள்ளிய, இனிய செந்தமிழ் நடை மாணவரைத்தமிழில் மெய்மறக்கச் செய்கிறது. பெருமிதத்தையூட்டி அரசியலைக் காட்டியவுடன் மாணவன் தன்னைப்பற்றிச்சிந்தித்துச் செயலாற்ற எண்ணுகின்றான். இவற்றிற்கு அடுத்தாற்போற் காணும் "எதிர்கால இந்தியா" என்னும்மொழிபெயர்ப்புக்கட்டுரை, கருத்தாற்சிறந்து மொழி நிலையில் இழிவெய்தி மாணவரும் எள்ளிநகையாடும் எளனத்திற்கு ஆளாகி நிற்கின்றது. பரிதிமாற் கலைஞர் இத்தகைய மணிப்பிரவாள நடையை "ஆபாசநடை" என்றறைந்தார். நான் அவ்வாறும் கூறவில்லை. படிப்போர் நினைப்பிற்கே விட்டு விடுகின்றேன்.

கூத்தாட்டவைக்குழாத்து காடி நுழைந்தாற்போல, பேராசிரியர் ச. சோமசுந்தர பாரதியார், தமிழ்ப்பெரியார்-திரு. வி. க, போன்றாரின் கட்டுரைகள்திகழவேண்டிய இடத்து, மேலே காட்டிய மொழிபெயர்ப்பாளரின் கட்டுரை திணிக்கப்பட்டுள்ளது. இத்தனையாண்டுகளிலும் நல்ல செந்தமிழ் எளிய நடையில் தமிழ்ப்பெரியார்-திரு. வி. க கட்டுரையைக் கண்டு கற்பிக்கும் ஆசிரியர்களும் கற்கும் மாணவர்களும் களிப்பெய்தினர். இவ்வாண்டு அத்தமிழ்ப் பெரியாரின் கட்டுரையைக்காணோம். காரணம் என்ன? யாமறியே மாயினும் ஒரும்; அவர் மக்கள் தொண்டர். ஏழை பங்காளி. எளிய தூய வாழ்க்கையர். பொருளாசையற்றவர். வேண்டோற்காசுகள் வேண்டாமல் கட்டுரையளிக்கக்கூடியவர். இத்தகைய காரணங்களினால் அவர் 'வாய்மொழி' பள்ளி மாணவர்கட்கு இல்லாமற்போய்விட்டது போலும்.

ரோஜா முத்தையா

உண்மையை உரைப்பதாயின் 'எதிர்கால இந்தியா' என்னுங்கட்டுரையின் மொழிநடை ஆறாம்படிவமாணவர் அறிவுநிலைக்கு ஏற்றதல்ல என்பதோடு-ஒரு அவிநாசியார் அமைச்சராக இல்லையென்றால் அம்மொழி பெயர்ப்பு நடை தார்மீக இந்துக்குத்தான் தகுதி என்று உறுதியாகக் கூறலாம்.

எதிர்கால இந்தியாவில் நந்தமிழ் நாட்டு இளைஞர்களின் வாழ்வு எவ்வாறு இருக்கவேண்டும்? மொழி நிலை எப்படியிருக்கவேண்டும்? என்று கல்வியமைச்சரே எண்ணிப்பார்த்திருந்தால், மொழி முன்னேறும். பிறமொழிகளில் ஆங்கிலம் ஒன்றே அறிந்த, வடமொழி எதுவுங்கல்லாத கல்வியமைச்சருடைய மொழி பெயர்ப்பில், நூற்றுக்குஇருபத்திமூன்று சொற்கள் விழுக்காடு பிறசொற்கள் கலந்து விளையாடுகின்றன. "பன்றியுடன் சேர்ந்த கன்றுங் கெடுமன்றோ?" இவ்வளவும் வடமொழியைப் படித்து அறியாத நிலைமையில் கல்வியமைச்சரே இப்படிக் கலந்து பேசுவதோடல்லாமல் எழுதியும் வைப்பாரேயானால்; ஏனைய எளிய மக்களின் நிலைமை தான் என்ன?

பல்லாயிரக்கணக்கான தமிழக இளைஞர்கள்—படித்து அறிவுபெற வேண்டிய பள்ளியிறுதிவகுப்பு மாணவர்கள்பாட ஏடுகளில்; படிப்பதற்கும், கேட்பதற்கும் வெறுப்பையும் கசப்பையும் தரும் பிறசொற்களைத்திணித்து, அவற்றிற்கு நேரான நல்லதமிழ்ச் சொற்களை வழக்காறற்றுப்போகும் வழியில் நழுவவிட்டு ஏடெழுதுவது தான் அறிவுடைமையா? அழகா? தமிழ் வளர்க்கும் முறையா? என்று கேட்பாரில்லையா?

தமிழுக்கு இனிமையெனச் சொல்லளவில் பொருள் கூறிவிட்டு, அதனினிமையைக் கெடுக்கும் கேடுகெட்ட செயல்கள் இந்நாட்டைவிட்டகல வேண்டாமா? அந்தோ! "வேலியே பயிரைத்தின்றால் விளைவதெப்படி? ஆங்கிலச் சொற்களைக் கலந்து பேசினால் தண்டப் பொருள் விதிக்குமளவு வடநாட்டில் மொழிப்பற்று முளைத்திருப்பதை, அடிக்கடி வடநாடு சென்று பழக்கமுடைய கல்வியமைச்சர் அறியாதிரார். ஏனோ தம்மறிவை அவ்வழியிற் செலுத்தினாரில்லை. தமிழ்மொழி பேசுபவரும் எழுதுபவரும் பிற சொற்களை கலந்தால் . தண்டப்பொருள் கட்டவேண்டுமென ஒரு திட்டங் கொண்டுவந்தால், அதில் பெருங்குற்றவாளியாகத் தோற்றமளிப்பவர் கல்வியமைச்சராகவே இருப்பதைக் காணலாம்.

பிறமொழி நுழைவால் தமிழ் கெடுமா? கெடாதா என்பதை வல்லார் வாய்க் கேட்டுணர்க. தெளிவு பிறக்கப் பார்ப்பனன் பரிதிமாற் கலைஞன் எழுதிய மொழிநூல் வரலாற்றில் "வடமொழிக்கலப்பு" என்னும் ஒரு சிறு பகுதியையேனும் படித்து தமிழ் அறிவு பெறவேண்டும். அமைச்சருங்காண்பாராக.

மொழியறிவில்லாத நிலையில் பலர் ஏடெழுத முன்வருவதைக்கண்டு கல்வியமைச்சர் கண்டிக்கவேண்டும். பாடநூல் எழுதுபவர்கள் தமிழறிவுடையவர்களாக இருத்தல் வேண்டும். அமைச்சர் விழிப்படையவேண்டும்.

கல்வி அமைச்சர் அவர்களின் கட்டுரையைப் பற்றிய கருத்தொன்றுங்கூறாமல் அவர் வரைந்துள்ள "எதிர்கால இந்தியா" என்னுங் கட்டுரையிற் காணும் பிறசொற்களுக்கு ஏற்ற தூய தமிழ்ச் சொற்களை மட்டும் இங்கு தருகின்றேன். இளைஞர்கள் அறிந்து திருந்துவாராக.

| அமைச்சர்சோல். | தமிழ்ச்சோல். |
|---|---|
| ஞானம் | அறிவு |
| இதர | மற்றைய |
| சமுத்திரம் | கடல் |
| ஆத்மா | உயிர் |
| இமம் | பனி |
| சிகரம் | உச்சி |
| மகத்தான | மேலான |
| நித்தியமான | நிலையான |
| தத்துவசாஸ்திரம் | கருவிநூல் (அ) |
| | உண்மை நூல் |
| | துணை நூல் |
| உன்னதமான | மேலான |
| | சிறந்த |
| க்ஷீணித்து | குறைந்து |
| மனிதவர்க்கம் | மக்களினம் |
| அன்னியர் | பிறர் |
| கஷ்டம் | இன்னல் |
| சக்தி | ஆற்றல் |
| | வலிமை |
| பாதித்தல் | பற்றுதல் |
| ஆதி | முதல் |
| விஷயம் | செய்தி; பொருள் |
| அந்தம் | கடைசி |
| ஞாபகம் | நினைவு |
| திவ்யமான | நேர்த்தியான (அ) |
| | மேலான |
| காரியம் | செயல் |
| சாதித்தல் | நிலைநாட்டல் |
| சரித்திரம் | வரலாறு |
| அதிகம் | மிகுதி |
| அவசியம் | இன்றியமையாதது |
| அனுபவித்து | துய்த்து |
| சந்தர்ப்பம் | வாய்ப்பு |
| புருஷர்கள் | ஆடவர்கள் |

[தொடர்ச்சி 12ம் பக்கம்]

# இருபத்தெட்டில் ஒரே ரவுண்டு.

★

[இந்தி நுழைப்பு அரசியலில் ஒரு சூது. இந்தச் சூதைச் சூதாட்டப்பாஷையிலே சொல்லி விளக்குகிறார் தோழர். அதனால் இதிலே வருகிற பெயர்களெல்லாம் கற்பனையல்லவேயல்ல. பேச்சுகள் மட்டும் சூதாடிகள் பேசுவது போல இருக்கும்.]

இந்தச் சீட்டுக் கட்டில் யாரும் 20-கேட்டு வெற்றி காணவே முடியாது.

போங்கசார் போங்கோ, நானும் ராமும் சோடி சேர்ந்து விளையாடினோமா, யாரும் நம்ம கிட்டேயே நிற்கமுடியாது. கூட நம்ம காமும், சப்போர்ட்டுக்கு இருந்துட்டான்னா யாரும் ஒண்ணுமே செய்துக்க முடியாது.

சரி......பார்க்கலாமே, இந்தா...... கொண்டுபோ...இதில் நீ வெற்றிகாண வில்லையென்றால் நீ நம்ம கம்பெனிக்கு லாயக்கற்றவன் தான்.

இன்னும் நீங்க ராமுவையும், காமுவையும் நன்றாகத் தெரிந்துகொள்ள வில்லைபோல யிருக்கு, வேண்டுமானால் பாருங்களேன் நாளைக்கே, வெற்றியுடன் திரும்புகிறேன்.

(மற்றொரு அறையில்)

சார், நம்ம செட்டி அந்தச் சூதாட்ட பழக்கத்தை இன்னும் விடவேயில்லை போலிருக்கிறதே! அவுங்க மேனேஜரிடமிருந்து அந்தப் பழைய சீட்டுக் கட்டை வாங்கி வந்து விட்டானாமே! சீட்டுக்கட்டுக்கு எத்தனை சீட்டு இருக்கிறது என்று கேட்டாலே அவனுக்குப் பதில் சொல்லவே தெரியாதே! இவன் ஒரு கோமாளி என்றுதான் அவுங்க மேனேஜரும் அவனை ஆட்டி வைக்கிறார் போல இருக்கிறது.

சீட்டுக்கட்டை வாங்கி வந்து விட்டானா? (ஆச்சரியம்) இவனுக்கு எத்தனைதரம் சொன்னாலும் அந்தச் சூதாட்டப் பழக்கத்தை விடமாட்டான் போலிருக்கே. அவனுக்கு ஏதாவது குடும்பம்ன்னு ஒண்ணு இருந்தாத் தெரியும். தன் மனைவி மக்களைப்பார்த்தாகிலும் திருந்துவான்... துரை! நீ பயப்படாதே. அவன் சோடி ராமு யிருக்கானே அவன் ஒரு குடும்பஸ்தன். கொஞ்சம் நாணயமாகவே நடந்துகொள்வாரகள்...

என்ன இருந்தாலும். இவர்களை அந்தக் கம்பெனியில் சேர்க்கப் பிரயாசை எடுத்திருக்கக் கூடாது. தீட்டின மரத்திற்கே கூர்மை பார்க்க முற்பட்டு விட்டார்கள்...

(ஹாஹா...சிரிப்பு) நீ சிறுவன், உனக்குத்தெரியாது. நம் பிள்ளைகளை நாம்தான் காப்பாற்றி, ஒழுங்குபடுத்தி—சீர்ப்படுத்தி களிப்பு எய்தவேண்டும்— நோக்கத்திற்கு நேர்மையில்லாவிடில் நசுக்கித் துரத்திவிடுவதா? இருக்கட்டும் பார்க்கலாம். சரி...அரசு எங்கே போய்விட்டான். நாளை அவனும் நீயும் தான் ஆட்டத்தில் உட்காரவேண்டும். என்ன முழிக்கிறே......பயமாக யிருக்கிறதா? மீன் குஞ்சுக்கு நீச்சம் பழக்கிக்கொடுக்கணுமா?

(மற்றொரு அறையில்)

ராமு! நீ என்ன சொன்னாலும் சரி. சீட்டுக்கட்டை வாங்கி வந்து விட்டேன்-காமுவும் சம்மதித்துவிட்டான். ஆனால் நீ மட்டும் இப்படிச் சொல்வது சரியல்ல......என் பயப்படறே ஆடித்தான் பார்க்கலாமே.

அவினா! உனக்கு எத்தனைதரம் தான் சொல்வது—உனக்கும் எனக்கும் சீட்டுப்பிடிக்கவே தெரியாது— நமக்கு சப்போர்ட் காமுக்கோ, சீட்டாட்டம் தலைகீழாகத்தான் தெரியும். அவர்களோ, அசகாய சூரர்கள். அவர்களைப் போய் நாம் தோற்கடிப்பதா?நல்லாச்சொன்னாய்-அவினா! நான் சொல்வதைக் கேள், பேசாமல் சீட்டுக் கட்டைக் கொண்டுபோய் என்னால் முடியாதுன்னு திருப்பிக்கொடுத்து விட்டு வந்துவிடு—அவர்களால் தான் இந்தக் கம்பெனியில் சேர்க்கப்பட்டோம்...அதையும் ஞாபகத்தில் வைத்துக்கொள். அவர்களை நாம் சேலஞ்ச் செய்வது நமக்குத்தான் கேவலம்.

என்னப்பா, அவினா! நான் அப்பவே சொல்லல்லையா, இந்த ராமு சமாசாரத்தை. ஒரு பயந்தாங்கொள்ளி...

அதிருக்கட்டும் ராமு! நீங்க ரெண்டு பேருடைய ஒத்தாசையை நினைத்துத்தான் பெருமையாகப்பேசி கட்டை வாங்கி வந்துட்டேன். அப்படியிருக்க இப்போ எங்களால் ஆடமுடியவில்லைன்னு வாபீஸ் கொடுத்தால் நம்மைப்பற்றி நம் மேனேஜர் என்ன நினைப்பார்...நம்மால் கூடியவரை முயற்சித்து ஆடிப்பார்க்கலாம். மனம் தளரவிடாதே அப்பா. நம்ம காமு இருக்கும்போது நமக்கென்னப்பா.

எனக்கென்னவோ், நீங்கள் செய்வதே பிடிக்கவில்லை. சரி...நாளை பார்க்கலாம்.

(முன்அறையில்.)

துரை! அரசு! நீங்கள் தயாராகுங்கள். நேற்று, அந்த ராமுவிடம் எவ்வளவு தூரம் சொல்லியும் கேட்கவில்லை. உங்களுக்குத் தைரியமிருந்தால் ஆடித்தான் தோற்றுப்போங்களேன்னு சொல்லிவிட்டான். இனி நாம் சமரசத்திற்கு போனால் சீட்டாட்டத்தில் ஜெயித்து விட்டதாக புரளி எழுப்பி விடுவார்கள்.

(சீட்டாட்டமன்றம்)

என்ன, துரை! நீயும் உன்சோடி, அரசும் தயார் தானே, சரி உட்காருங்கள். ஒரே ஆட்டம்தான். மறு ஆட்டம் கிடையாது-காமு! அந்த சீட்டுக்கட்டைஎடு......இப்படிக் கொடு. நானே கலக்கிப் போடுகிறேன்......கேளப்பா!

“இருபது”

இருபதா, சரிநான் இருபத்திஒன்று, காமு! இந்த சீட்டைபார்.

ஜெய்ஹிந்த்! வெற்றி நமதே, ராமு பயப்படாமே ஆடு. ஹானர்ஸ் கோட்டு தான்-

நம்ம அவினா என்ன சாமான்யப் பட்டவனா?

அரசு நீதான் இறக்கம். சீக்கிரம் இறங்கு.

(அரசுக்கு கிளாவர்தான் துருப்பு என்றுதெரியும். தன்டைமன்ஜாக்கியை போட்டான்—ராமு டைமன் ஆஸையும்—அவினா ஒரி டைமன் ஒன்பதையும் போட்டான். துரை துருப்பைக் கேட்டு கிளாவர் ஒன்பதைப்போட்டு வெட்டி பிடியை மடக்கினான்—எண்ணிக்கை எட்டாயிற்று—அரசும், துரையும் கையிலிருந்த சீட்டைவீசி எறிந்தனர்—ராமுவுக்கும், அவினாவுக்கும் காமுக்கும் முகத்தில் அசடு வழிந்தது—ஒரே ரவுண்டில் வெற்றி) சீட்டுக்கு தீ வைத்து ஜுவாலைவிட்டு எரிந்தது!

அவினா, ராமு, காமு மூவரும், மேனேஜரிடமிருந்து வந்த கையெழுத்துப்பிரதியை வைத்துப்படித்தனர்-

நீங்கள் மூவரும், நம் சூதாட்டச் கம்பனிக்கே லாயக்கற்றவர்கள்—நீங்கள் இருபத்திநான்கு மணிக்குள், எமதுகம்பனியை விட்டு வெளியேற வேண்டும்-

மூவரும் கன்னத்தில் கைவைத்து, இரண்டாம் கட்டைகளாகிவிட்டோமே என்று கண்ணீரும் கம்மலையுமாகஉட்கார்ந்திருந்தனர்—.

வருத்தப்படாதீர்கள்—நானே உங்களை என்கம்பனியிலேயே சேர்த்துக் கொள்கிறேன்-நீங்கள் எனக்குத்துரோகம் நினைத்தாலும், நான் உங்களைப் பரிவுடன்தான் அணைப்பேன். வாருங்கள், துரைஅரசுடனேயிருந்து மகிழ்ச்சியுறுங்கள்—

மூவர் கண்களிலும் ஆனந்தக்கண்ணீர் சொரிந்தது

“ஆதவன்”

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

# அம்பலம்.

"சிறுகும்பல்தான்"

"அரசியலில் கருத்து வேறுபாடுடைய ஒரு சிறு கும்பல்தான் இந்தியை எதிர்க்கிறதே தவிர இந்த நாட்டுப் பொதுமக்களிலே எவரும் இந்தியை எதிர்க்கக்காணோம், மாறாக இந்தியை வரவேற்கத்தான் செய்கிறார்கள்'' என்பதுதான் தமிழ்நாட்டுக் காங்கரஸ் கட்சியிலுள்ள இன்றையத் தலைவர்கள் என்பவர்கள் வெளிப்படுத்தி வருகிற கருத்து.

இந்தக் கருத்தை மனதார நம்பித்தான் சொல்லி வருகிறார்களா? அல்லது நம்பாமலே, சொல்ல வேண்டிய நிலையில் இருக்கிறோமே என்பதை எண்ணி, அதற்காகச் சொல்லி வருகிறார்களா? அது எப்படியோ போகட்டும்.

இன்று இந்தியை யார் யார் எதிர்க்கிறார்கள்? அவர்கள் எந்தெந்த ஊர்? என்ன ஜாதி? என்ன மதம்? என்கிற புள்ளி விபரங்களையெல்லாம் அரசாங்கம் சேகரிக்க முனைந்திருக்கிறது. முக்கியமாக அடையாள மறியலில் கலந்துகொண்ட முஸ்லிம்கள் எத்தனை பேர்? அவர்கள் எங்தெந்த ஊர்? அவர்கள் இந்தி எதிர்ப்புக்காகச் செய்து வருகிற நடவடிக்கை என்ன? என்பவைகளையெல்லாம் அங்கங்கேயுள்ள போலீஸ் அதிகாரிகளைக் கொண்டு திரட்டியனுப்புமாறு சர்க்கார் கேட்டிருக்கிறார்கள் என அறிகிறோம்.

பள்ளிக்கூட ஆசிரியர்கள்—முக்கியமாகத் தமிழாசிரியர்களில் யார் யார் இந்தியை எதிர்க்கின்றார்கள் என்கிற விபரத்தைத் தெரிந்து கொள்ளவும், எதிர்ப்பு முறையில் பேசினாலோ, எழுதினாலோ எப்படி நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும் என்பதையும், அந்தந்த ஜில்லாக் கல்வி அதிகாரிகளுக்கு அறிவித்து இருக்கிறது என்கிற விபரத்தைச் சென்ற வாரம் சட்டசபையில் கல்வி மந்திரியார் அறிவித்திடக்கேட்டோம்.

அரசாங்கம் இவ்வாறு தனித் தனியாக—பயமுறுத்தும் வகையிலே — வகுப்புவாரியாக எண்ணிக்கை எடுப்பது ஒருபுறமிருக்க, ஒவ்வொரு ஊரிலுமுள்ள காங்கரஸ் தோழர்கள்—பிரமுகர்கள்—மந்திரிகளின் தயவைக் குறுக்கு வழியிலே சம்பாதிக்கலாம் என்று நம்புகிறவர்கள்—கள்ளமார்க்கெட் பதுக்கிகள் வேறு, வியாபாரத்துறையில் ஈடுபட்டிருக்கும் இந்தி எதிர்ப்பாளர்களுக்குத் தொந்தரவு கொடுத்து வருகின்றனர்.

இந்தி எதிர்ப்புப் போராட்டம் தொடங்குவதற்கு முன்னாலேயே, பெரியாரவர்கள் போராட்டத்தின் கடுமையைக் குறித்து—போராட்டத்திலீடுபடுவோர் அடையவேண்டியிருக்கும் தொல்லைகளைக் குறித்துக் குறைவாகக் கணக்கிடவில்லை. கணக்கிட்டதை வெளிப்படுத்தாமலுமில்லை. அதேபோல போராட்டத்தில் ஈடுபட்ட—ஈடுபடும் தொண்டர்களும் தங்களின் எதிர்காலத்தைக் குறித்து—இப்போதைய வாழ்விலுண்டாகும் நெருக்கடியைக் குறித்து நினைத்துப் பார்க்கவில்லை என்று கூறிவிடவும் முடியாது.

போராட்டத்தில் கலந்துகொண்டதால் அங்கங்கே உள்ள சிப்பந்திகள் முதலாளிகளால்-மேலதிகாரிகளால் எப்படி எப்படிக் கொடுமைப் படுத்தப்பட்டார்கள் என்பதைப் பற்றிப் பல கடிதங்கள் நமக்கு வந்திருக்கின்றன. அவற்றுள் திருவையாற்றிலிருந்து ஒன்று.

திருவையாற்றில்

"ராமகிருஷ்ணன் என்னும் தோழர் திருவையாற்றிலுள்ள இரும்புக் கடைச் சிப்பந்தி. 10 வருஷ காலமாக அந்தக்கடையின் நம்பிக்கையான நாணயமான உழைப்பாளி. அவர் அடையாளமறியலில் கலந்து கொண்டிருக்கிறார். முடிவு என்னாயிற்று தெரியுமோ? இந்திஎதிர்ப்பையே காரணமாகக் காட்டி, அவ்வாறு இந்தி எதிர்ப்பதால் கடை வியாபாரம் பாதிப்பதாகக் காரணம் சொல்லி கடையிலிருந்து விலக்கப் பட்டிருக்கிறார். இவ்வளவுக்கும் அந்தக்கடையின் முதலாளி ஒரு திராவிடர், சண்முகம் செட்டியார் என்பவர்.''

இது அந்தக் கடிதத்தின் சாரம். ஒரு நாள் இந்தி எதிர்ப்பிலே கலந்து கொண்டார், அதனால் தன் வாழ்வையேமாற்றியமைத்துக் கொள்ள வேண்டியவராயிருக்கிறார். இது தான் அதன் கருத்து. ஆகவே இந்தியை எதிர்க்கும் ஒரு தொழிலாளி—பாட்டாளி—தன் வாழ்வில் எந்தெந்த முனைகளுக்குத் தள்ளப்படுவானோ தெரியாது. இருந்தும் கூட—தெளிவாக இந்த நிலையை அறிந்திருந்தும் கூடஆயிரக் கணக்கில் புற்றீசல்கள்போல் படை படையாக, அணி அணியாகப் போருக்குப் புறப்படுவதைத் தான் முன்பு பார்த்தோம், நாளைக்குப் பார்க்கவும் போகிறோம்.

மகளே உன் சமர்த்து!

அப்படியிருக்க அரசாங்கம் ஏன் இந்த வெட்டி வேலையிலீடுபட வேண்டும்? உருப்படியான பல காரியங்கள் செய்ய வேண்டிய நேரத்தில்—உடைப்பஞ்சம் உணவுப் பஞ்சம் என்று மக்கள் கதறிக் கொண்டிருக்கிற வேளையில்—ஆளவந்தவர்களின் புத்தி ஏன் இப்படிப்போகவேண்டும்? "வகுப்புவாதமே கூடாது'' "வகுப்புவாதத்துக்கு இடமில்லை'' என்று ஒரு பக்கம் வரட்டுக் கூச்சல் போட்டுக் கொண்டே, மற்றொரு பக்கம் இந்தியை எதிர்ப்பவர்கள் யார் யார் என்று வகுப்புவாரி முறையில் கணக்கெடுக்கிறதென்றால்—எதிர்ப்பைச் சிறுகிறு கூறாக்கி சர்வ நாசம் செய்வோமென்றால் நாம் என்ன கூறமுடியும்? ஆட்சி வலுப்பெற வேண்டுமானால், ஆணவ மமதை கொலுவீற்றிருக்க வேண்டுமானால், பிரித்தாளும் முறையே பெரும் வெற்றியைத் தரும் என்ற வெள்ளையனின் அடிச்சுவடுதானே இது. இந்த அடிச்சுவட்டில் செல்லத்துணிந்து விட்டபின் நாம் கூறுவதற்கு என்ன இருக்கிறது? தன் மகளின் விபசாரப் போக்கின் வேகத்தையும் திறமையையும் கண்ட ஒரு தந்தை, 'மகளே உன் சமர்த்து' என்று தட்டிக்கொடுத்தானாம். அதே போல வெள்ளைக்காரனும் இவர்களைத் தட்டிக்கொடுத்து அணைத்துக் கொடுக்கலாம். ஆனால் வெள்ளையனின் அடிச்சுவடு, அடக்குமுறையில் செல்லும் பாதை-பிரித்தாளும் சூழ்ச்சி, அவன் வேண்டவே வேண்டாம் என்றோடிய பாதைக்கும்—அவன் மறைவின் அடிச்சுவட்டுக்கும் திருப்பிவிடமாட்

(தொடர்ச்சி 11-ம் பக்கம்)

# குடி அரசு

9—10—48 சனிக்கிழமை.

## சிறை செல்லுமுன் சந்திக்க ஓரே வாய்ப்பு!

ஈரோட்டில் இம்மாதம் 23, 24ம் தேதிகளில் திராவிடக் கழகத்தனி (ஸ்பெஷல்) மாநாடு நடைபெறப் போகிறது. இது வரையில் நடந்த திராவிடக்கழக மாநாடுகள் ஒவ்வொன்றும், முந்திய ஆண்டுகளில் நடந்ததைவிட மேலான மாநாடுகள் ஆகவே நடந்து வந்திருக்கின்றன.

திராவிடக்கழகத்தின் (அல்லது தென்னிந்தியர் சங்கத்தின் அல்லது ஜஸ்டிஸ்கட்சியின்) தலைமை, பெரியாரவர்களின் கைக்கு வந்த ஆண்டான 1938ம் ஆண்டு டிசம்பரில் சென்னையில் நடந்த மாநாட்டைப் பார்த்த ஜனங்கள், ஜஸ்டிஸ் கட்சி தோன்றிய 20 ஆண்டுகளாக (அதாவது 1918 முதல் 1939 வரை) இப்படிப்பட்ட மாநாடு நடந்ததில்லை என்று கருதி ஆச்சரியமடைந்தார்கள். என்றாலும் அது முதல், நடந்த மாநாடுகள் எல்லாம் ஜஸ்டிஸ் கட்சியின் பேரால் நடந்திருந்தாலும்சரி அல்லது திராவிடக் கழகத்தின் பேரால் நடந்திருந்தாலும் சரி அவைகள் ஒன்றுக்கொன்று மேலாகவே, பிரபலமாகவே நடந்து வந்திருக்கின்றன.

மாகாண மாநாடுகள் மாத்திரமல்லாமல் இந்தப் பத்து ஆண்டுகளாக நடந்து வந்த ஜில்லா மாநாடுகள் கூட அதுபோலவே ஒன்றுக்கொன்று மேலாகவே நடந்து வந்திருக்கின்றன.

திராவிடக்கழகத்தின் சார்பாகக் கருப்புச் சட்டைப்படைத் தொண்டர்கள் மாநாடுகளும், திராவிட மாணவர்கள் மாநாடுகளும், மற்றும் எப்படிப்பட்ட கூட்டங்களும் பதினாயிரம் மக்களுக்குக் குறைவில்லாமல் ஒரு லட்சம் மக்கள் வரை கூடும்படியான மாநாடுகளாகவே நடந்து வருவது, கழக எதிரிகளும்அறிந்து ஆச்சரியப் படும்படியான சேதியாக இருந்து வந்திருக்கிறது.

இப்படி நடந்துவந்திருப்பதிலும் ஒருகுறிப்பிடத்தக்க விஷயம் என்னவென்றால், திராவிடக்கழகத்தைப் பற்றிக் காங்கரஸ்காரர்களும், பார்ப்பனர்களும், பார்ப்பன அடிமைகளும், பார்ப்பனப் பத்திரிகைகளும் செய்து வருகிற பிரசாரம் மிக மிக அயோக்கியத்தனமான தன்மையில் எவ்வளவோ பழிகளைச் சொல்லி, மக்களைத்திராவிடக்கழகத்து எதிரிகளாகும்படி செய்திருந்தும், திராவிடக்கழக மாநாடுகள் இப்படி நடந்து வந்திருப்பதும், மற்றும் அதிகாரிகள் பெரிதும், போலீஸ்பெரிதும் பார்ப்பனர்களாகவும் இருப்பதால்அவர்கள் ஆங்காங்குள்ள காலிகளை ஏவிவிட்டுத்தொல்லை கொடுத்தும், காங்கரஸ் சட்ட சபைமெம்பர்கள் தங்கள் தங்கள் எல்லையில், திராவிடக்கழகத்தால்தங்கள் செல்வாக்குப் போய்விடுகிறதே, தங்கள் மானம் போய் விடுகிறதே என்கின்ற காரணத்தால் அதிகாரிகளைச் சரிப்படுத்திக்கொண்டு, எச்சிலைச் சோம்பேறிகளுக்குக் கள் வாங்கிக்கொடுத்து ஏவிவிட்டு கொட்டகைக்கு நெருப்பு வைத்தல், மாநாட்டுக்கு வந்தவர்களையடித்தல், பெண்களை மானபங்கப்படுத்தல், பிரதிநிதிகள் சாமான்களைப் பறித்துக்கொண்டு போகுதல், பணத்தைப் பிடுங்கிக்கொள்ளுதல் முதலிய அட்டூழியங்கள் செய்தும், மக்கள் சிறிதும் சளைக்காமல், பயப்படாமல் அடிக்கடி பெரும் மாநாடுகள் நடந்தவண்ணமாகவே இருக்கின்றன.

இப்படியெல்லாம் நடந்திருந்தும் கழக மாநாடுகள் சிறப்பாக, வளர்ச்சியாக நடைபெறக்காரணம் கழகத் திட்டங்களும், நடத்தைகளும், கழகத் தொண்டர்கள், தலைவர்கள் ஆகியவர்களது உண்மையும் உறுதியும் கொண்ட தன்மைகளும், சிறிதும் சுயநலமற்ற உழைப்புகளுமேயாகும்.

மற்றும் இன்று இந்நாட்டில் திராவிட மக்களின் இழிநிலையைப் போக்கி, திராவிடர்களின் உண்மையான மேன்மைக்கும் விடுதலைக்கும் உழைக்கும் ஸ்தாபனம் திராவிடக் கழகத்தைக் தவிர வேறில்லை என்பதை மக்கள் உணர்ந்து கொண்டதுமாகும்.

ஆதலால்அவைகளைப்போலவே ஈரோட்டில் நடக்கும் இந்தத் தனி மாநாடும் இது வரை நடந்த மாநாடுகள் போலவே தனிச் சிறப்புடன், குறிப்பிடத்தகுந்த மாநாடாகவே நடைபெறப்போகிறது.

தூத்துக்குடி மாநாடு திராவிடக் கழகத்தை நேரடி நடவடிக்கையில் இறங்கச் செய்தது என்றால் ஈரோடு மாநாடு ஒரு மகத்தான அளவில் மக்களுக்கு ஒரு அரும்பெரும் வழி காட்டக்கூடும் என்பதில் அய்யமில்லை. இத்தனை நாளாக நம் கழகம் செய்து வந்த பிரசாரப் பலனை அளந்து பார்த்து, அதற்கேற்ற பயனை விரைவில் அடையத்தக்கபடியான திட்டங்கள் தீட்டியே தீரும் என்று நினைக்கின்றோம். திராவிடக்கழகம் பிரசார நிலையைத் தாண்டிவிட்டதென்றே சொல்லலாம். இனி அது செயலிலேயே பணியாற்ற வேண்டியதாகும்.

இதுவரை இயக்கக் காரியங்கள் பலவற்றிலும் ஆண்களே பெரிதும் ஈடுபட்டு வந்தார்கள். இனி அதாவதுஈரோட்டு மாநாட்டிற்குப்பிறகு நம் திராவிட வீராங்கனைகளான பெண்மக்கள்—தாய்மார்கள் இயக்கத்தொண்டிலும், நேரடி நடவடிக்கையிலும் முன்னணியில் நின்று, இதுவரை எந்த இயக்கமும் செய்திருக்காத அளவுக்குத் தொண்டாற்றி, இந்திய யூனியன் முழுதும் ஆச்சரியப்படத்தக்க அளவுக்கு நடந்து காட்டப்போகும் காரியத்துக்கு அடிகோலப்படலாம் எனவும் கருதுகிறோம்.

ஆதலால் தமிழ் நாட்டிலுள்ள எல்லாத் திராவிடப் பெண்மணிகளும் இம்மாநாட்டுக்கு அவசியம் வரவேண்டுமென்று தனி அழைப்பு அழைக்கிறோம்.

தொண்டர்கள் யாவரும் குறிப்பாகச் சிறை சென்றவர்களும், செல்லத் தயாராய் இருப்பவர்களும் தவறாது வந்து தலைவர்களின் அறிவுரைகளைக் கேட்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.

மாநாட்டுக்குப் பின் நடைபெறும் போராட்டங்களின்போது, தாய்மார்கள், பொதுமக்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பதைப்பற்றித் தலைவர்கள் ஆற்றும் அறவுரைகளைக் கேட்கத்

ரோஜா முத்தையா

## திராவிடக் கழகத் தனி (ஸ்பெஷல்) மாகாண மாநாடு, ஈரோடு.

ஸ்பெஷல் மாகாண மாநாடு நாளது அக்டோபர் மாதம் 23, 24ம் தேதி சனி, ஞாயிற்றுக்கிழமைகளில், ஈரோடு பழைய புகை வண்டி நிலையத்திற்கருகில் பெரியாரவர்கள் தோட்டத்தில் அமைக்கப்பட்டிருக்கும் அர்ச்சுனன் பந்தலில் நடைபெறும்.

மாநாட்டுப் பந்தலிலேயே இரவில் சீர்திருத்த நாடகம் நடைபெறுவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

வரவேற்புக்குழுவினர்.

## திராவிடக் கழகத் தனி (ஸ்பெஷல்) மாகாண மாநாட்டின் வரவேற்புக் குழு, ஈரோடு.

★

7—10—48-மாலை 4-மணிக்கு ஈரோடு திராவிடக் கழகக் கட்டிடத்தில் மாநாட்டின் வரவேற்புக் கழகக் கூட்டம் நடைபெற்றது. பெத்தாம்பாளையம் தோழர் பழனிச்சாமியவர்கள் தலைமை வகித்தார். கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின.

மாநாட்டின் வரவேற்புக் கழகத் தலைவர்களாக தோழர்கள் பெத்தாம்பாளையம் பழனிச்சாமியவர்களும் ஈரோடு ஈ. வெ. கி. சம்பத் அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

காரியதரிசிகளாக தோழர் பி. சண்முகவேலாயுதம், எஸ். ஆர். சந்தானம் எம். கே. குகநாதன் ஆகியவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்

தோழர்களான என். கரிவரதசாமி பொருளாளராகவும் எஸ். அப்பாவு விளம்பர அதிகாரியாகவும் ஆர். பெருமாள் தொண்டர் படை கேப்டனாகவும் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

---

திராவிடத் தாய்மார்கள், இளைஞர்கள், மாணவர்கள், பொதுமக்கள் யாவரும் வந்தருள்வது மிகவும் அவசியமும் கடமையுமாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இம் மாநாடு முடிந்ததும் திராவிடத் தொண்டர்கள், தலைவர்கள் பெரிதும் சிறைப்படுத்தப்படுவார்கள் ஆனதால் இனி அடுத்த மாநாடு தலைவர்கள், தொண்டர்கள் சிறைகளிலிருந்து வந்த பின்புதான் நடைபெறக் கூடும் ஆதலால் ஒருவரை ஒருவர் சிறை செல்லு முன்பு காண பொதுமக்களுக்கு இதுதான் ஒரே சமயமாகும். ஆகவே இம்மாநாட்டிற்கு வந்துகலந்து பங்கு பெறாதவர்கள் தங்கள் தவறுதலுக்கு பின்னால் வருந்தும்படி நேரிடும். அப்படி நேரும்படியாய் நடந்து கொள்ளாமல் இப்போதிருந்தே தயாராயிருக்க வேண்டும் என்று ஞாபகப்படுத்துகிறோம்.

## ஈரோடு ஸ்பெஷல் மாநாட்டின் டிக்கட் விபரம்.

★

| | |
|---|---|
| புரவலர் (போஷகர்) நன்கொடை. | 100—0—0 |
| ஆதரவாளர் ,, | 50—0—0 |
| அன்பர்கள் ,, | 25—0—0 |
| உள்ளூர் வரவேற்பு உறுப்பினர் | 10—0—9 |
| வெளியூர் வரவேற்பு உறுப்பினர் | 5—0—0 |
| பிரதிநிதிகள் கட்டணம் | 3—8—0 |

பிரதிநிதிகளுக்கு 2 நாட்களுக்கும் உணவும் சிற்றுண்டியும் பிரசார நாடக நுழைவும் உண்டு.

பெண்களுக்கு 2 நாள் உணவுக்கும் சிற்றுண்டிக்கும் 2—8—0. இவர்களுக்கு மகாநாடு, நாடகக் கூட்டங்களுக்கு நுழைவுக்கு அனுமதி உண்டு.

பார்வையாளர் கட்டணம் இரு நாளைக்கும்ரூ.2—0—0. இவர்கள் மாநாட்டுக்கும் நாடகத்திற்கும் ஆகிய இரு கூட்டத்திற்கும் அநுமதிக்கப்படுவர்.

உள்ளூர்ப்பெண்களுக்குக் கட்டணம் 0—8—0. இவர்கள் மாநாடு பந்தலுக்குள் மாநாடு, நாடகம் ஆகிய இரு கூட்டத்திற்கும் அனுமதிக்கப்படுவார்கள்.

பார்வையாளர்களுக்கு இடமிருந்தால்தான் டிக்கட் கொடுக்கலாம். டிக்கட் தணிக்கை மிகக் கவனமாக நடைபெறும். உணவுச் சீட்டுத் தணிக்கையும் மிகக்கவனமாகப் பார்க்கப்படும்.

இடம், உணவு வசதி அதிகமாக இல்லாததால் அன்பர்கள் டிக்கட்களை முன்னாடியே வாங்கிக் கொள்வது நலமாகும். டிக்கட் இன்றி எவரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

[:●:]

## ஈரோடு திராவிடர்கழக மாகாண தனிமாநாடு தொண்டர்களுக்கு

★

தோழர்களே!

23, 24ம் தேதிகளில் நடைபெறும் மாநாட்டிற்கு உள்ளூர் வெளியூர்களிலிருந்து தொண்டர்களாக கலந்து கொள்ள விரும்பும் நண்பர்கள் கீழ்கண்டமுகவரிக்கு கடிதம் எழுதவும்- மாநாடு ஆரம்ப தேதிக்கு முன்னதாகவே வர வேண்டியதாய் இருக்கும். ஈரோட்டுக்கு வந்துசேர வேண்டிய தேதி பத்திரிக்கையில் வந்ததும் உடனே வந்துசேரவேண்டும்.

இரா. பெருமாள்.
தொண்டர் படை கேப்டன்.
C/o
குடியரசு ஈரோடு.

---

இரண்டாவது அம்சம், இரண்டாம் மொழியொன்றைக் கற்றாக வேண்டிய நிர்ப்பந்தமாகும். இந்த இரண்டாம் மொழிகளில் ஹிந்தியும் ஒன்று. இரண்டாம் மொழியாக, ஹிந்தியோ, சமஸ்கிருதமோ அல்லது வேறெந்த இந்திய மொழியோ எடுத்துப் படிக்கலாம். ஆயினும் ஹிந்திதான் பிரதானமாக வலியுறுத்தப்படுகிறது. ஒவ்வொரு பள்ளிக்கூடமும் ஹிந்தி முன்ஷியை நியமித்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது.

Dr. கிருட்டினசாமி.

ரோஜா முத்தையா

# சப் மாஜிஸ்திரேட் சாம்பசிவம்.

[✶]

“நீங்கள் மந்திரிக்கு எதிராக கருப்புக் கொடி பிடித்து ஆர்ப்பாட்டம் செய்து போக்குவரத்துக்கு இடைஞ்சல் செய்தீர்களா”?

“நாங்கள் போக்குவரத்தை தடை செய்யவில்லை. அமைதியாக எங்கள் லட்சிய ஒலிகளைச் சொன்னோம்”

“அப்படியானால் கூட்டம்கூடியிருக்குமே”?

“அது எங்கள் குற்றமல்ல”

“நீங்கள் குற்றவாளிகள் தானே?”

“அமைதியான முறையில் எங்கள் திட்டப்படி வெறுப்பைக் காட்டிக் கொள்வது குற்றமென்று கூற முடியுமா”?

“அப்படியானால் உங்களுக்கு ஏதாவது சாட்சி உண்டா?”

“சாட்சிகள் தயாரிக்கவும் எதிர்வழக்காடவும் தயாராக இல்லை”

“உங்களுக்கு தலா பத்துரூபாய் அபராதம் விதிக்கிறேன்”

“பணம் கட்டமுடியாதே!”

“ஒருவாரம் கடின காவல் தண்டனை!”

“ஏற்றுக்கொள்ளுகிறோம். வணக்கம்”

சப்மாஜிஸ்திரேட் சாம்பசிவம் திடுக்கிட்டார். இம்மாதிரிப் பதிலை தனது பத்துவருடகால ‘சர்வீஸில்’ ஒரு நாள் கூட கேட்டதே இல்லை. கேள்விக்கு பதில் கணீர் கணீர் என ஒலித்தது. “ஏற்றுக் கொள்கிறோம்—வணக்கம்” என்ற தொனியிலே கம்பீரமும் உறுதியும் நிறைந்திருந்தது. “வணக்கம்” என்ற சொல்லிலே தமிழ்மணம் கமழ்ந்திருந்தது. கூண்டிலே நிறுத்தப்பட்ட குற்றவாளிகளின் முகங்களிலே புன்னகை தவழ்ந்திருந்தது. கோர்ட்டிலே பரபரப்பு ஏற்பட்டது. இவ்வளவையும் கண்ட பிறகுதான் சப்மாஜிஸ்திரேட் சாம்பசிவம் திடுக்கிட்டார்.

சாம்பசிவம், எத்தனையோ குற்றவாளிகளுக்குத் தீர்ப்பு அளித்திருக்கிறார். “உனக்கு ஒரு வாரம் சிறை” என்ற நீதிபதியின் சொற்களைக் கேட்டு குற்றவாளிகள், கூண்டிலே உடல் நடுங்கியிருப்பதை, எவ்வளவோ முறைபார்த்திருக்கிறார். “சிறை” என்றவுடனே, சிந்தும் கண்ணீர் ஆறாகப் பெருக்கெடுத்தோடுவதை, அனுபவ பூர்வமாகக் கண்டறிந்திருக்கிறார். வழக்கறிஞர்களை வைத்து வாதுகள் புரிந்து சிறைக்குப் பதிலாக “அபராதம்” மட்டும் கட்டி வெளியேறியவர்கள் பலரைப் பார்த்திருக்கிறார். “அபராதம் கட்டமுடியாது சிறை தண்டனையை ஏற்றுக்கொள்ளுகிறோம்” என்ற முறையிலே குற்றவாளி என்று குற்றம் சாட்டப்பட்டவர்கள், கூறியிருப்பதை அவர் பார்த்தது மில்லை; கேட்டதுமில்லை. அதனால் தான் சாம்பசிவம் ஆரம்பத்திலே குறிப்பிட்டபடி திடுக்கிட்டார்.

குற்றவாளிகள், கூண்டை விட்டு சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். “வடநாட்டுச் சுரண்டல் ஒழிக, தமிழ் வாழ்க” என்ற ஒலிகள் கோர்ட்டைச் சுற்றி ஒலித்தன. ‘சிறைச்சாலை என்ன செய்யும்’ என்ற கீதம் காற்றிலே கலந்தது. அரைமணி நேரத்திற்குப் பிறகுதான் கோர்ட்டிலே அமைதி நிலவியது.

ஆனால் சாம்பசிவத்திற்கு ‘ஆபீஸில்’ வேலை ஓடவில்லை. அவர் எண்ணம் சிந்தனையிலே ஈடுபட்டது. உடல் நலமில்லையென்றும், ஓய்வு வேண்டுமென்றும், அதற்குப் பிறகு விசாரிக்க வேண்டிய ‘கேசுகளை’ எல்லாம் தள்ளிப் போட்டுவிட்டு வீட்டிற்குச் சென்றார். எதிர்ப்புக்கும் இன்னலுக்கும் அஞ்சாது, சீர்திருத்த நோக்கத்தையே குறியாகக் கொண்டு, சிறைச்சாலையிலே செத்து மடிந்த மேல்நாட்டு அறிஞர்பலரின் வாழ்க்கைவரலாறு, அவர் மனக்கண் முன் தோன்றித் தோன்றி மறைந்தது. வாயிற்படியில் நுழைந்த போது, “இன்று எத்தனை பேருக்கு தண்டனை அளித்தீர்கள்” என்ற மனைவியின் குரல்கூட அவருக்குக் கேட்க வில்லை.

சாம்பசிவம் என்றைக்கும் இவ்வாறு சிந்தனையிலீடுபட்டதில்லை. இவ்வளவு உறுதியுடன் போராடும் தொண்டர்களை தயாரித்து களம் அனுப்பிய பெரியார் இராமசாமியின் உருவம்அவர் அகக் கண்முன் தோன்றியது. அவரை அறியாமலேயே ‘கமலா’ (அவள்தான் அவரது தர்மபத்தினி) என்றழைத்தார். கமலா வந்துநின்றாள். “கமலா” இந்தி எதிர்ப்பைப்பற்றி நான் தவறாகக் கருதிக் கொண்டிருந்தேன். இந்த நாட்டிலே இந்தியை எதிர்ப்பதால் வரும் இன்னலை ஏற்பார் இருக்க மாட்டார்களென்று! எண்ணினேன். இந்தி எதிர்ப்பு ‘புஸ்’ என்று போய்விடும் என்ற கூற்று உண்மையாகுமென்று நினைத்தேன். ஆனால் இராமசாமி நாய்க்கர் எவ்வளவு அபாரமான முறையிலே தொண்டர்களை தயாரித்திருக்கிறார் தெரியுமா? என்றார்.

கமலாவுக்கு ஒன்றுமேபுரியவில்லை, கோர்ட்டிலேநடந்த கேஸில் ஏதாவது ஏற்பட்டதோ வென்று பதைத்து, “எனக்கு ஒன்றுமே புரியவில்லை” என்று தன் கணவன் தோளைப்பிடித்தாள். சாம்பசிவம் அதற்குப்பின் ஒன்றும் சொல்லப் பிரியப்படவில்லை. ‘கமலா நீ போய் காபி கொண்டுவா’ என்று மட்டும்தான் கூற முடிந்தது. ஆபீஸ் சமாச்சாரமல்லவா? அதுவும் அரசியல் விஷயமல்லவா? அரசாங்க ஊழியர்கள்தான் அரசியல் விஷயங்களில் தலையிடக்கூடாதாயிற்றே!

* *

சப்மாஜிஸ்திரேட் சாம்பசிவம் வீட்டில் மட்டும் தானா இது போன்று நடை பெற்றது? தமிழ் நாட்டு ஒவ்வொரு சப்மாஜிஸ்திரேட் இல்லங்களிலேயும் மேலே பொறிக்கப்பட்டது போன்றுதான் நிகழ்ந்திருக்க முடியும். சிந்தனை என்பது நம் நாட்டை விட்டு அடியோடே போகவில்லையல்லவா, அதனால்தன்.

“பித்தன்”

## மூன்று

★

மூன்று என்பது எண்ணிக்கையைக் குறிப்பது என்று எல்லோரும் அறிவர். ஆங்கிலேயருக்கு ‘பதின்மூன்று’ எப்படி ஆகாதோ அதுபோல் ஆரியருக்கு (இந்துக்களுக்கு) மூன்று ஆகாது. ஏன் ஆகாது என்று பகுத்தறிவுக்கேள்வி கேட்டால், ‘இவன் நாஸ்தீகன், இவனுக்கு எதிலும் நம்பிக்கை இல்லை’ என்பார்கள்.

ஆரியக் கடவுள்கள் மும்மூர்த்திகள். சைவர்கள் அணிவதும் திருநீறு, (திரிநீறு என்றே வைத்துக் கொள்ளலாம்) அதாவது திரி (ஆங்கிலத்தில் மூன்று) நீறு அல்லது மூன்று பட்டைகள். (பட்டைகள் என்றவுடன் பொங்கல் புளியோதரை, அக்கார வடிசில் என்கிற பட்டைச் சாதங்களின் நினைவு வந்திடக் கூடும்.) வைணவர்கள் அணிவதும் திருநாமம் அல்லது மூன்று நாமங்கள். இந்துக்கோயில்களில் ஆண்டவனைச்சுற்றி வருவதற்கும் மூன்று பிரகாரங்கள். அந்த ஆண்டவனும், ஆண்டவனை (உருவங்களை) உண்டாக்கிய ஆரியர்களும், ஆரிய அடிமைகளும் மார்பில் அணிந்திருப்பது முப்புரி நூலாகிய பூணூல். ஆண்டவனுக்கு (சிவனுக்கு) இருப்பதாகச் சொல்லப்படும் கண்களும் மூன்று. இராமாயணத்தில் தசரத சக்ரவர்த்திக்கு இருந்த பட்டத்து மனைவிகளும் மூவர். (கோசலை கைகேயி, சுமத்திரை) இவ்வாறு

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

மூன்று என்பது இந்துக்கொள்கை களிலே மண்டிக்கிடக்க, மூன்றை ஏன் மக்கள் வெறுக்கிறார்கள் என்பது புரியவில்லை. ஒரு இடத்துக்குப் போவதாயிருந்தால்கூட மூவர் போகக்கூடாது என்று சொல்லுகிறார்கள். (குடிஅரசு, விடுதலை வாசிப்பவர்களை நான் சொல்லவில்லை.) மூன்று என்றவுடன்—கோயில்களும் ஆண்டவன்களும் பூணூல்களும் தானா நினைவுக்கு வரவேண்டும் என்று சிலர் நினைக்கலாம். ஆதலால் இதை இத்துடன் நிறுத்தி மேற்கொண்டு செல்கிறேன்.

மூன்று என்பது முடிவான தன்மையை அதாவது இறுதியைக் குறிப்பதாகும். ஏலம் விடுபவரும் ஒருதரம், இரண்டுதரம், மூன்றுதரம் என்று சொல்லி மூன்றாவதையே முடிவாகவைத்துக் கொள்வர். ஓட்டப்பந்தயங்களில் கூட ஒன், டூ, த்ரீ என்று மூன்றாவதையே முடிவாக வைத்திருக்கிறார்கள்.

நமது தமிழ் மறையாம் திருக்குறளும் அறம் பொருள் இன்பம் எனும் மூன்று இயல்களை (பகுதிகளை) உடையதே. எனவே திருவள்ளுவர் பகுத்தறிவால் ஆய்ந்தறிந்த முடிவே முப்பால் (திருக்குறள்.) அதிகம் சொல்வானேன்! பகுத்தறிவு இயக்கத் தந்தை பெரியார் அவர்கள் பாடுபட்டு வருவதும் நம் நாட்டில் சமூகம் பொருளாதாரம் அரசியல் இம்மூன்றின் முன்னேற்றத்துக்காகவே. தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள் அடிக்கடி கூறிவருவதும் நம்மக்களுக்கு உணவு, உடை, உறைவிடம் இம்மூன்றும் வேண்டும் என்பதே. ஆகவே மூன்று என்பதை வெறுப்பது அறிவுடைமையாகாது. மேற்சொன்ன மூன்றுக்காகவே பாடுபட்டுவரும் பெரியார்கள் வாழ்க என்பதோடு இதை முடிக்கிறேன்.

(என். வி.)

---

[7ம் பக்கத் தொடர்ச்சி]

டாது என்று எப்படித்தான் நம்புகிறார்களோ?

**"கழுதை செத்தால் சாகட்டும்"**

காங்கரஸ் பெருந்தலைகளின் நடத்தை யிப்படியிருக்க, அங்கங்கேயுள்ள காங்கரஸ் குட்டித் தொண்டர்களின் நடத்தையோ சிற்சில இடங்களில் மிகவும் ஆபாசமாகவும் அருவருக்கத்தக்கதாகவும் இருந்து வருகிறது.

இந்தி ஒழிக! தமிழ் வாழ்க! என்று, இந்தியைத் திராவிடத்தில் எதிர்ப்பவர்கள் சார்பில் கூறினால், இந்தக் குட்டித் தொண்டர்கள் உடனே கண்ணை மூடிக்கொண்டு, கருத்தையும் அடைத்து விட்டு இந்தி வாழ்க! தமிழ் ஒழிக! என்று கூவி வருகிறார்கள். இப்படி இவர்கள் கூறுவதால் தமிழ் ஒழிந்து விடுமென்றோ, இவர்களின் தமிழ் மாத்துக் குறைச்சலென்றோ நாம் கூற முன்வரவில்லை. இவர்களுடைய நோக்கம் எதிர்ப்பவர்களுக்கு எதிராக ஏதோ ஒன்றைக் கூறவேண்டும் என்கிற அளவில் தான் இருக்கிறது. இந்த நோக்கம் சரிதானா? என்றுதான் நாம் கேட்கிறோம். மேலும் இது எவ்வளவு ஆபாசமான போக்கு என்றும் கேட்கிறோம்.

தமிழ் வாழ்க! என்று தமிழன் கூறினால் மற்றொரு தமிழனே தமிழ் ஒழிக! என்கிறான். இதை எண்ணும்போது இந்தப் பிரகஸ்பதிகள், நாளை எப்படி எப்படி நடந்து கொள்வார்கள் என்று எண்ணினால் யாரும் சிரிக்காமலிருக்க முடியாது.

மத வெறிக்கோ, மற்ற வெறிக்கோஆளாகி, மனிதன் மிருகத்தோடு போட்டி போட்டுக்கொண்டு, பெண்களைக் கற்பழித்தல், மத மாற்றம் செய்தல் போன்ற துர்க்கிருத்தியங்கள் வட நாட்டில் நடந்தது போல தென்னாட்டிலும் நடக்குமானால், இன்றைய இந்தி எதிர்ப்பாளர்கள் அதை ஆதரிக்க மாட்டார்கள் என்பதுறுதி. அதே நேரத்தில் அப்போக்கைஎதிர்த்துக் குண்டர்களை அழிக்க எல்லா வகையான ஏற்பாடும்செய்வதோடு, "தாயைக் காப்பாற்று!" மனைவியை மாற்றானிடம் காட்டிக் கொடாதே!" "மகளின் மானத்தைக் காக்க உன் உயிரைத்துற"! என்றெல்லாம் மக்களுக்குக்கூறத் தான் செய்வார்கள். ஆனால் அப்போது இந்தத் தமிழ் ஒழிகப்பேர்வழிகள் என்ன செய்வார்கள்? "தாயைக் காப்பாற்றாதே"! மனைவியை மாற்றானுக்குக் காட்டிக் கொடு" "மகளின் மானம் குலையட்டும், உன்உயிரைக்காப்பாற்று" என்றுதானேகூறுவார்கள். இன்று தமிழ்ஒழிக! என்றுகூறுபவர்கள்—பொருளையுணரும் புத்தியில்லாமல் எதிர்ப்புக்குஎதிராக ஏதோ ஒன்று கூறவேண்டும் என்று கருதுபவர்களிடம் வேறு எதை எதிர்பார்க்க முடியும்?

இப்பேர்ப்பட்ட புத்திசிகாமணிகளின் மூளை சில சமயங்களில் எப்படி வேலை செய்யும் என்பதற்கு இதோ ஒரு உதாரணம் கிடைத்திருக்கிறது. இந்தப் பேர்வழி அய்யம்பேட்டை. இவர் இந்த மாதம் 2உ இந்தி எதிர்ப்பைக் கண்டித்துத் தமிழ் நாட்டில் இந்தி பரவவேண்டும் என்பதற்காக உண்ணாவிரதம் இருந்திருக்கிறார். மனுஷன் அன்று மாலையிலேயே நல்லபுத்திவந்து உண்ணாவிரதத்தைக் கைவிட்டிருக்கிறார். அந்த வரையிலும் சந்தோஷம். ஆனால் இந்தி பரவுவதற்கு-இந்தி எதிர்ப்பைக் கண்டிப்பதற்கு உண்ணாவிரதம் இருப்பதும் ஒரு வழி என்று இந்த சத்தியாக்கிரகி காண்பித்திருக்கிறாரே, இவருடைய மூளையை என்ன செய்வது? நாளைக்கு சென்னையின் பிரதமராக—இந்தியாவின் பிரதமராக ஆவதற்கு இவர் ஆசைப்படலாம். பிர்லாவின் சொத்தில் சரிபங்கு கிடைக்க வேண்டுமென்று எண்ணலாம். அழகுப் போட்டியில் முதல் பரிசு பெற்ற ஒரு அழகியை மணந்து கொள்ளவேண்டும் என்று மனதில் கருதலாம். இப்படி எதை எதையோ எண்ணி, இந்த எண்ணம் நிறைவேறாவிட்டால் நான் உண்ணாவிரதமிருப்பேன் என்று இவர் ஆரம்பித்தால், இந்த மனுஷனை யார்தான் சட்டை பண்ண முடியும்? இதனால் பேர்வழியின் அயோக்கியத்தனம் அம்பலமாகுமே தவிரவேறென்ன? கழுதை செத்தால் சாகட்டும் என்று ஜனங்கள் பேசிக்கொள்வார்களே தவிர, இதற்கெல்லாம் பொதுமக்களால் வேறு என்ன பரிகாரம் செய்யமுடியும்?

❁

கலாச்சார சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த ஒரு மாணவன், இரண்டாம்மொழியாகத் தன்தாய் மொழியைத் தேர்ந்தெடுத்துப் படிக்க உரிமையிருக்கிறதாயினும், அவ்விதம் அவன் செய்தால் அந்த மொழியைக் கற்பிக்க அவன் படிக்குமிடத்தில் ஆசிரியர் யாரும் கிடைக்கமாட்டார்கள். எனவே, இந்தச் சிறுவனின் கதி என்ன? தன் தாய் மொழியைப் பறிகொடுத்து, ஒரு அயல் மொழியான ஹிந்தியைப் படித்துத் தொலைக்க வேண்டியதாகிறது.

Dr. கிருட்டினசாமி.

ரோஜா முத்தையா

(5ம் பக்கத் தொடர்ச்சி)

| | |
|---|---|
| ஸ்தாபனங்கள் | நிலையங்கள் குழுக்கள் |
| மனோதத்துவ சாஸ்திரம் | உளநூல் (அ) மனநூல் |
| இரகசியம் | குழுமொழி |
| சுலோகம் | பாட்டு |
| சமூகம் | முன்னிலை கூட்டம் |
| வருஷம் | ஆண்டு |
| முக்கிய அம்சம் | முதல்நிலை |
| தேசம் | நாடு |
| சரீரம் | உடல் |
| விராட்புருஷன் | கடவுள் |
| யத்தனம் | முயற்சி |
| தியானம் | எண்ணம் |
| சுவாசம் | மூச்சு |
| ரிஷிகள் | முனிவர்கள் |
| இதர ஜீவசத்து | ஏனையஉயிராற்றல் |
| முக்கியம் | இன்றியமையாதது |
| கருமம் | செயல் |
| அனுபவம் | ஆட்சி |
| உபத்திரவம் | இடையூறு |
| ஜீரணித்தல் | அற்றல் (செரித்தல்) |
| கிரகித்து | உட்கொண்டு |
| கல்விமான்கள் | அறிஞர்கள் |
| மகான் | பெரியார் |
| லௌகிகம் | உலகியல் |
| லட்சியம் | குறிக்கோள் |
| தைரியம் | மனத்திட்பம் (அ) மன உறுதி |
| சாஸ்திரம் | நூல் |
| புனிதம் | தூய்மை |
| தாமதம் | காலநீட்டிப்பு |
| கேவலம் | இழிவு |
| வக்கீல்கள் | வழக்கறிஞர்கள் |
| வர்க்கம் | இனம் |
| சேவை | தொண்டு (அ) பணி |
| அர்ப்பணம் | அளித்தல் |
| நிர்மாணம் | ஆக்கல் |
| ஆத்மிகக் கல்வி | உயிர்க் கல்வி |
| லௌகிகக் கல்வி | ஒப்புரவு |
| அரை மைல் | அரைக்கல் |

இன்னும் பல.

இம்மொழி பெயர்ப்பின் இழி வழக்கை எடுத்துக்காட்ட இவையே போதுமெனினும், இரண்டு சொற்றொடர்களையுந் தருகிறேன். திருக்குறள் கற்றதாகக் கூறும் தமிழனின் தமிழைப் பாருங்கள். அமைச்சரின் அருந்தமிழ் நடை:— ''தற்காலத்தில் ஆத்மிக வாழ்வில் க்ஷீணித்து வரும் மனித வர்க்கத்திற்கு உயர்ச் சக்தி கொடுக்கக்கூடிய ஆத்மிக வெள்ளம் மறுபடியும் இங்கிருந்துதான் புறப்படப்போகின்றது'' இவ்வளவு அழகாகத் தமிழ் வெளிவருவதைக்கண்டுதான் உண்மைத் தமிழறிஞர்கள், பேராசிரியர்கள் கலைக்களஞ்சியக் கூட்டத்திற்கு வந்த அழைப்பைப் புறக்கணித்தனா என்ற உண்மை வெளிப்படுகிறது. ''ஒரு மனத்தினராக இருந்தால் தான் தனி மனிதர்களும், சமூகங்களும் வெற்றிபெறும் இரகசியம்'' தொடரே பிழை.

அமைச்சரின் மொழிபெயர்ப்புக் கட்டுரை ஆறு பத்திகளை யுடையன. பத்தி பத்தியாகக் கணக்கெடுத்ததில் 693-சொற்கள் நிறைந்த அக் கட்டுரையில் 150-க்கு மேலாகப் பிறசொற்கள் விரவியிருக்கின்றன.

எப்படியிருக்கிறது அமைச்சர் தமிழ் வளர்க்கும் அழகு?

புலவர் தா. அழகுவேலன்.

# குடிசைத் தொழிலுக்கு தீ!

★

கைத்தறி நெசவுத் தொழில் சீரும் சிறப்பும் பெற்று அதிகமாக வளர்ந்தோங்கி முன்னணியில் நிற்பது சென்னை மாகாணம்தான். இன்று சென்னைமாகாணத்தில்வேலைசெய்து கொண்டிருந்த 5 லட்சம் கைத்தறிகளும் கண்ணுறக்கம்கொண்டு, நெசவுத் தொழிலாளர்கள் வகையற்று வாடி வதை பட்டுக்கொண்டு கிடக்கும், ஆபத்தான நிலையில் இருந்து கொண்டிருக்கின்றனர். இரண்டு மூன்று மாதங்களுக்குப் பிறகு இன்று கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலம் நூல் வினியோகம் நடைபெற்றிருக்கின்றது. 5 ராத்தல் (அரைக்கட்டு) ஒவ்வொரு தறிக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த அரைக்கட்டு நூலைவைத்துக்கொண்டு ஒரு நெசவுத் தொழிலாளி என்ன செய்ய முடியும் என்பதை சர்க்காரோ அல்லது அதன் சாயலில் நிற்கும் எம். எல். ஏ. க்களோ சிந்தித்ததாகவே தெரிய வில்லை. அமுல் நடத்த முடியாத தீர்மானங்களை அலசிப்பார்க்க அய்ந்தாறு நாட்களும், கேலி, கிண்டல் தமாஷ், விவகாரங்களுக்குப் பல மணி நேரங்களும் சட்ட சபையில் வீணாகச் செலவிடப் படுகிறது. ஆனால் கைத்தறி நெசவுத் தொழிலாளர் கண்ணீர் விடுவது பற்றி விளக்கிப் பேச அங்கு நேரமில்லை. பேசமுடிந்தாலும் கவனிப்பார் கிடையாது. நைத்தறிநெசவு சம்பந்தமாக ஓரளவுக்காவது விபரம் தெரிந்த எம். எல். ஏ. க்கள், திருவாளர்கள், சங்கர சுப்ரமண்ய முதலியார் என். எம். ஆர். சுப்பராமன், ஜனாப் அப்துல் மஜீத் இவர்களைத் தவிர வேறு யாரும் இருப்பதாகவோ அல்லது இவர்களின் கூற்றைச் செவிமடுப்பதாகவோ தெரிய வில்லை.

பத்திரிகைகளை எடுத்துக் கொண்டால், அந்தோ; பரிதாபம். ராய்ட்டர், செய்தி ஸ்தாபன உடன்பாட்டின் பெருமைகளைப் பற்றியும், ''அழகியொருத்தி ஆடையை அவிழ்க்க ஆசைப்பட்டாள்'' என்ற விளக்கம்பற்றியும் கூறுகின்றார்களே தவிர, மக்கள் படுங்கஷ்டங்களை சர்க்காருக்கு எடுத்துக் கூறுவதாக இல்லை. ஆங்காங்கு இருக்கும் நிருபர்கள் கூட இது பற்றிக் கவலை எடுத்துக்கொள்வதில்லை. பொதுமக்களுக்கும் சர்க்காருக்கும் மத்தியில் இருக்கும் நீதிபதிகளாக பத்திரிகைகள் நடந்து கொள்வதே கிடையாது. அதிலும் தேசியத்தின் பேரால் மக்களை மயக்கிக் கொண்டிருக்கும் பத்திரிகைகளைப் பற்றி எண்ணினாலே இரத்தம் கொதிக்கும் அளவுக்கு அவர்களின் செயல் இருக்கிறது. ஜனநாயகத்தையும் சகிப்புத் தன்மையையும் பற்றி அவர்கள் கூறுவதைக்கேட்டால், வெள்ளையனும் வெட்கப்படுவான். எப்படியோ போகட்டும். இனியாவது பத்திரிகைகள் இதுபற்றிச் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும். பத்திரிகைகட்குப் புத்தி புகட்டுகிறான், என்று நினைத்தால் அது பெருந் தவறு என்று கூற ஆசைப்படுகிறேன்.

''குடிசைத் தொழிலுக்கு ஜே, என்று கூப்பாடு போட்டதுபோக, இன்று குடிசைத் தொழிலுக்கு தீ'' என்று வருத்தத்தோடு கூறித்தான் தீரவேண்டிய திருக்கிறது. ரோம் நகர் தீப்பற்றி எரியும் பொழுது, மன்னன் பிடில் வாசித்துக் கொண்டிருந்த மாதிரி, ரொட்டி கிடைக்கவில்லை என்று கூறிய ரஷ்ய பாட்டாளிகளைப் பார்த்து, ''கேக்கு சாப்பிடுங்கள்'' என்று கூறிய ஜார் மன்னன் மாதிரி, நமது சர்க்காரும் நடந்து கொண்டால், உண்மையில் கைத்தறி நெசவுத் தொழிலாளர்களை, பட்டினிபோட்டுக் கொன்ற குற்றம், சர்க்காரையேசாரும் என்று பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். அவ்வளவு நெருக்கடியான கட்டத்தில் இன்று நெசவுத்தொழிலாளர் இருந்து கொண்டிருக்கின்றனர் என்பதை உடனடியாக சர்க்காரும் சம்பந்தப்பட்டவர்களும் பத்திரிகைகளும் கவனித்து ஆவன செய்யவேண்டும் என்றுகூறி முடித்துக்கொள்கிறேன்.

[கல்லிடை டி. எம். பீர்முகம்மது]

●

இந்தியை எடுத்துக் கொண்டாலோ அதில் எவ்விதக் கலைகளும் கிடையாது. கலையில் அது சிறுமைமொழி. கலையே இல்லாத போது கலைஞர்களை எங்கு அது தோற்றுவித்திருக்கப் போகிறது. இந்தியில் இலக்கியமோ, இலக்கணமோ, காவியமோ கிடையாது. திருக்குறளுக்கு ஒப்பான நீதி நூலோ, தொல்காப்பியத்திற்கு ஒப்பான இலக்கணமோ, சிலப்பதிகாரத்திற்கு ஒப்பான காவியமோ கிடையாது.

திரு. வி. க.

[4ம் பக்கத் தொடர்ச்சி]

நாட்டு மக்களது நல்வாழ்வுக்கு எவ்வளவு கேடுபயக்கிறது என்பதைப் படம் பிடித்துக் காட்டக்கூடிய தன்மையிலிருந்தது. ஒவ்வொரு சீன் முடிவின் போதும் சந்திராவைப் பார்த்தேன். அவள் முகம் விகாரமடைந்திருந்தது. ஏன் இவளை அழைத்துக் கொண்டு வந்தோமென்று ஆகி விட்டது. முதற்பகுதியில் ஒவ்வொரு சீனிலும் உற்சாகமாயிருந்தவள் இரண்டாவது பகுதியில் மட்டும் வாய் திறக்காதது எனக்கு ஆச்சரியமாகவே இருந்தது. தன்னினத்தைப்பற்றிக் குறை கூறுகிறார்களே என்று அவள் மனம் புண்பட்டிருக்கவேண்டும். சந்திரா ஒன்றுமறியாதவளல்லவே. சாதிகள் ஏன் ஏற்பட்டன, எப்படி ஏற்பட்டன என்று மாணவர்களுக்குக் கற்றுக் கொடுப்பவள், சந்திரமோஹனைக் கண்டு வெறுப்புக் கொள்வானேன் என்று என் மனம் சிந்தனையிலீடுபட்டது. நாடகம் முடிந்ததும் நான் வருகிறேனென்று கூறி வீட்டிற்குப் போய்விட்டாள்.

எனக்கு அன்று இரவு முழுவதும் தூக்கமே வரவில்லை. ஒரு பார்ப்பனப்பெண் தன் இனத்தைப்பற்றிக் கவலை எடுத்துக்கொள்கிறாளே, அதிலே ஒரு சிறிதளவு இனஉணர்ச்சி கூட நம் திராவிட இனத்து ஆண்களுக்கு இல்லையே என்று என் மனம் வேதனைப்பட்டது. அவள் மட்டுமா கவலைப்பட்டாள், அன்று வந்திருந்த அத்தனை பார்ப்பனர்களும் நாஸ்திகக் கூட்டம் என்றுதானே சொல்லினர்.

மறுநாள் மாலை சந்திரா வந்தாள். என்றைக்கும் இருக்கும் கலகலப்பு அன்று அவளிடம் காணோம். என்னிடமிருந்து எடுத்துச்சென்ற அத்தனை தன்மானப் புத்தகங்களையும் கொண்டு வந்திருந்தாள். "இனி நீங்கள் என்னை நம்பமாட்டீர்கள். நாங்கள் கோட்ஸே கும்பலல்லவா" என்று சொன்னாள். நெடுநாட்களாக இவைகளைச் சொல்ல வேண்டுமென்று எண்ணினாளோ இல்லையோ—அவளது குரலிலே ஏதோ பொருள் மறைந்து கிடந்தது போன்று எனக்குத் தெரிந்தது. எனக்கு மனம் திடுக்கிட்டது. என்றைக்கும் இருக்கும் புன்முறுவலும் விளையாட்டுத் தன்மையும் அன்று அவளிடம் இல்லை என்று அவளது முகத்திலிருந்தே தெரிந்தது. திகைப்பாகத் தானே இநக்கும். "அது சரி சந்திரா, நாடகம் நேற்று எப்படி இருந்தது" என்று கேட்டேன். "நாடகமா, அது ஒரு நம்பத்தகாத கதையாச்சே" என்று சாதாரணமாகப் பதிலளித்தாள். "நம்பத்தகாத கதையா? சரிதம்படித்த நீயா கூறுவது! முருகன் வேடனாக மாறி, கிழவனாகத் தோன்றி, யானையைக் கொண்டு வள்ளியை மணந்தது உனக்கு நம்பத்தகாத கதையாகத் தெரியவில்லை, மராட்டிய மண்டலத்திலே மாவீரர்கள் இருந்தது மட்டும் நம்பத்தகாத கதையாகத் தெரிகிறது! நந்தனார் தீயிற்குளித்து ஜோதியிற் கலந்தது நம்பத்தகுந்ததாகத் தெரிகிறது. மராட்டிய மண்டலம் உயர் சாதி என்ற இறுமாப்புக் கொண்ட பார்ப்பனர்களால் சிதைவுற்றது நம்பத்தகாததாகத் தெரிகிறது போலும். கண்ணன் கோபிகையுடன் விளையாடியது நம்பத்தகுந்தது. கருத்து நிறைந்த பகுதியை கற்பனைத் திறமூலமாக வெளிப்படுத்துவது நம்பத்தகாதது. சந்திரா! நீ, ஒரு விசித்திரமான பெண்" என்று மளமளவென்று எனது உள்ளத்திலிருந்து வெளிவந்ததைக் கொட்டினேன். அவள் அதிகம் பேசவில்லை. பள்ளியில் நாளை தேர்வு இருப்பதாகவும் அதற்கு ஆவன செய்யத் தலைமை ஆசிரியையைக் காணவேண்டுமென்றும் கூறிவிடை பெற்றுக்கொண்டாள்.

என் மனம் குழப்பமாகவே இருந்தது. இவள் மட்டுமா நம்பத்தகாத கதை என்று கூறுகிறாள். இவளைப்போன்று மனப்போக்கு கொண்டவர்கள் அனைவருமே இவ்வாறு தானே கூறுகிறார்கள். சந்திரா அன்றையச் சம்பவத்திலிருந்து அதிகமாக என்னுடன் பேசுவதே இல்லை. என்னுடைய தொடர்பையும் குறைத்துக் கொள்ளலானாள். இப்பொழுதெல்லாம் நாங்கள் என்றைக்கோ ஒரு நாள் சந்திப்போம். எங்கள் உரையாடலிலே காதல் பேச்சு இருக்காது, கருத்து நிறைந்த சுவையான பகுதியும் எங்கள் பேச்சிலே மிளிராது. 'சௌக்கியமாக இருக்கிறோ மென்ற வார்த்தையிலேயே எங்கள் பிரிவு ஏற்படும். ஆனால் அவளைக் காணும் போதெல்லாம், "காதல் என்றால் மனமும் மனமும் பொருந்துதல்; காதல் என்பது அழகியகனவல்ல, க்ஷண நேரத்து சரீர சுகமுமல்ல, காதல் என்பது இரண்டு மனங்களின்சேர்க்கை" என்ற காண்டேகாருடைய வாசகங்களை என் வாய் முணு முணுக்கும்.

# முத்துரங்கத்தின் மூளையில்…………?

[★]

சென்னையிலிருந்து வெளியாகும் "குமுதம்" எனும் மாத மிருமுறை வெளியீட்டில் நண்பர் சி. என். முத்துரங்கனார் "இந்தி அவசியம்" எனும் தலைப்பின்கீழ் தனது கருத்தைத் தீட்டியுள்ளார்கள்.

அறிவுக்கண் கொண்டுகூட அல்ல—மேல்வாரியாக அக்கட்டுரையைப் படித்த உடனே எந்த அளவிற்கு அவர் தன்மானத்தை அடகுவைத்துள்ளார் என்பது தெற்றெனவிளங்கும்.

"இவரும் ஒரு திராவிடரா?"

"இவர் உடம்பில் திராவிடரத்தம் தான் ஒடுகிறதா?" என்று கட்டுரையைப் படிக்கும் ஒவ்வொரு தோழர்களுக்கும் தோன்றும்.

நிற்க, அக்கட்டுரை கூறும் கருத்தை இனிக்கவனிப்போம்.

"இந்தியின் அவசியத்தைப்பற்றி இப்பொழுது சொல்லத்தேவையில்லை" என்று கட்டுரையை ஆரம்பித்து—"இந்தியில் கலை இருக்கிறதோ; இல்லையோ, பெரும்பான்மையினரால் பேசப்படும் பாஷையாக இருப்பதால், இமயம் முதல் கன்னியாகுமரி வரை உள்ள ஜனங்கள் ஒரே சமுதாயமாக, ஒரே பாஷையில் பேசிப் பழக வேண்டுமென்பதுதான் தேசத்தின் நலத்திற்கு உகந்தது" என்றுகூறிக் கட்டுரையை முடித்துள்ளார்கள்.

மேலும் கட்டுரையின் இடையிடையேயும் இம்மாதிரி வார்த்தைகளை உள்ளடக்கிக் கட்டுரையைத் தீட்டியுள்ளார்கள்.

"சுதந்தர இந்தியாவில்—சுதந்தரமடைந்த இந்தியர்களுக்கு—அன்னிய பாஷையாகிய ஆங்கிலம் பொது பாஷையாக இருக்க முடியாது" என்று தோழர் முத்துரங்கம் கூறுகிறார்கள்.

சுதந்தர இந்தியாவில்—சுதந்தரமடைந்த இந்தியர்களுக்குத்தானே—அவரது கருத்துரை பொருந்தும்.

வடவாட்சியிலிருந்து விடுபட விழையும், திராவிடனுக்குப் பொருந்ாதே! காங்கரஸ் வட்டாரத்தில் அறிஞர் எனத்திகழும் முத்துரங்கனாருக்கு இது கூடப் புரியவில்லை என்றால்………அவரது மூளையில்—மூடுபனி மறைத்துள்ளது என்றுதான்—எண்ண வேண்டியுள்ளது.

மேலும், "இந்துஸ்தானிபிரசார சபை—சென்னையில் ஏற்பட்டது

முதல் தென்னாட்டிலும் பெருவாரியான மக்கள் இந்தி படித்து வருகிறார்கள். ஆக இந்தி ஒன்றுதான் நம் நாட்டின்—பொது தேச பாஷையாக இருக்கமுடியும்'' என்றும் தீட்டியுள்ளார்கள்.

இந்த அவரது கருத்திற்கு நாம் விளக்கம் கொடுப்பதைவிட—அவரது பாசறையிலுள்ள—தோழர் ம. பொ. சி. கூறியுள்ள கருத்தையே எழுதுவது சாலச்சிறந்தது என்ற முடிவுடனேயே—அவரது கருத்தை தீட்டியுள்ளேன்.

"இருபது ஆண்டுகளாக தமிழ் நாட்டின் தலைநகரில் இந்தி பிரசாரசபை—வேலை செய்து வந்திருந்தும்,—ஒரு பெரிய தேசிய இயக்கம் அதற்கு ஆதரவு காட்டியும்,—உலகப் பெரியார் காந்தியடிகள் அதன் தலைவராயிருந்திருந்தும்—பள்ளிகளுக்குத் தேவையான அளவுக்குக்கூட ஆசிரியர்களைத் தயார் செய்ய முடியவில்லை யென்றால் தமிழ் நாட்டில் இந்தியைப் பரப்பும் முயற்சி தோல்வியடைந்து விட்டதென்று தானே—அர்த்தம்?''

என்று இவ்வாறாக தோழர் ம. பொ. சி. தமிழ் முரசு எனும் ஏட்டில் தீட்டியுள்ளார்கள். இப்பொழுது அன்பர்கள்—முத்து—ரங்கனார்கூறிய கருத்தைஆராய்ந்து பார்ப்பார்களானால் —தோழரின்-பொருத்தமற்றகருத்தைத்தெரிந்து கொள்வார்கள்.

மேலும் "இந்தியை எதிர்ப்பவர்களின் நோக்கம் தமிழ் சீர்குலைவது என்பதல்ல, ஆங்கிலம் போய் விடுகிறதே என்பதுதான் அவர்களுடைய ஆட்சேபனைக்குக்காரணம். ஆங்கிலத்தைப் பழகிக்கொண்டு, ஆங்கிலேயர்களுக்கே அடிமையாக இருப்பதில்-அவர்களுக்குப் பூரண விருப்பம்'' என்றும் முத்துரங்கம் கூறுகிறார்கள்.

இந்தியைப் பழகிக்கொண்டு—வடநாட்டாருக்கு — அடிமையாக இருப்பதில்—பூரண விருப்பம் கொண்டுள்ள தோழர் முத்துரங்கம்—அதே பழக்கத்தை நம்மீது காட்டி குற்றம் சாட்டுகின்றார்.

இந்நிலை இரங்கற்பாலதே!

ஜெர்மானியர் — இந்தியாவைக் கைப்பற்றினால் என்ன செய்வது? ஆகவே காரியம் மிஞ்சுமுன்—ஜெர்மன் மொழியைக் கற்று—ஜெர்மானியர் இந்தியாவைக் கைப்பற்றியவுடன்—அவர் ஆட்சி இங்குமலர்ந்ததும்—ஜெர்மன்மொழி தங்களுக்கும்தெரிகிறது என்றகாரணத்தைக் காட்டி, உத்தியோகம் பெற்று அவர் தம் அடிமையாக வாழலாம் என எண்ணி, ஜெர்மன் மொழியை யுத்த காலத்தில் கற்க ஆரம்பித்த கூட்டத்தைப் போன்றவர்களல்ல-திராவிடர்கள்!

அன்னிய ஆட்சி என்றவுடன் அதை முதலில் அழிக்கப் புறப்படுபவர்கள் திராவிடர்கள் தான். சான்றாக—சரிதங்களைப் புரட்டிப்பாருங்கள் தெரியும்.

இங்ஙனம் திராவிடரின் மனப்போக்கிருக்க—எங்கோ வீசவேண்டிய சொல்லம்பை நம்மீது வீசுகிறார் முத்துரங்கம்.

காலத்திற்கேற்ற கருத்து என்பது கடுகளவும் அவரிடம் இல்லை என்றே நம்பவேண்டியுள்ளது.

நிற்க, "அதோடு வடநாட்டாரின்—தொடர்பே இல்லாமலிருக்கவேண்டுமென்பது அவர்கள் நோக்கம். அதுவும் முட்டாள் தனமான யோசனை'' எனவும் கூறி யுள்ளார்கள்.

"உலகத்தொடர்பே யில்லாமல்-தனியரசு—செய்யப் போகிறதாம் இந்தியா? கேளுங்கள் கதையை. முட்டாள்தனமான யோசனை'' என்றுதான் ஆங்கிலேயனும்—தனியரசு—கேட்ட இந்தியரைப் பார்த்து நகைத்தான்.

அதே பாடத்தை முத்து ரங்கங்கள் திருப்பிப்படிப்பதென்றால், "ஏகாதிபத்தியத்தின்'' அடுத்த பதிப்புத்தான் இக்காங்கிரஸ்ஆட்சி என்றுதான் கண்ணியமுள்ள எவர்க்கும் சொல்லத்தோன்றும்.

ஏகாதிபத்தியத்தை விரட்டி விட்டோம் என எக்களிக்கும் தோழர்கள் முத்துரங்கனாரின் மூளையிலிருந்து உதித்த இந்த "......தனமான யோசனை''யை திருப்பித் திருப்பிப் படித்துகருத்துத்தெளிவு பெறுங்கள்.

"மா. தங்கவேலர்''

---

[3ம் பக்கத் தொடர்ச்சி]

விட்டு மானங்காப்பவனல்லவா தமிழன்? 'ஆரிய நாட்டினர் ஆண்மையோடியற்றும் சீரிய முயற்சி' என்ன? ஆங்கிலேயரிடமிருந்து இந்திய நாட்டாட்சியைப் பெறுவது. ஆரிய நாட்டினர் மட்டுமா அம்முயற்சி செய்தனர்? திராவிட நாட்டினர் என்ன அப்போது தூங்கிக் கொண்டா இருந்தனர்? சிதம்பரம் பிள்ளை கூடவா புறக்கணிக்கப் படவேண்டும்? தமிழ் நாட்டினரை விட்டு ஆரிய நாட்டினரை மட்டும் குறிப்பானேன்? அதுதான் பாரதியாரின் ஆரியப்பற்று. அவர் எண்ணப்படியே ஆங்கிலர், ஆரியரிடம் நாட்டாட்சியை ஒப்படைத்து விட்டுப் போய் விட்டனரென்று மனங் கொதித்துக் கொண்டிருக்கும் தமிழ்ப்பிள்ளைகளுக்கு இப்பாட்டு 'வேந்த புண்ணில் வேல் நுழைப்பது போலல்லவா இருக்கும்? திராவிட இன உணர்ச்சி உண்டாகக் கூடாது என்னும் எண்ணத்துடன் —அவ்வுணர்ச்சியைஒழிக்கப்புகுத்தப்படும் இது, திராவிட இனவுணர்ச்சி என்னும் எரிகிற நெருப்புக்கு எண்ணெய் போன்றல்லவா ஆகி விட்டது?

'வாழிய செந்தமிழ்' என்னும் பாடலைப் பாடிக்கொண்டேவந்து, 'ஆரிய நாட்டினர்' என்றதும், மானமுள்ள தமிழ் மாணவர்கள் உளக்குமுறலையும், வெறுப்புணர்ச்சியையும், அவர்கள் முகக்குறிப்பால் பார்க்கும் பார்ப்பன ஆசிரியர்களின் முகச்சுழிப்பையும் நேரில் காணலாம். இது குளிக்கப்போய்ச் சேறு பூசின செயலேயாகும்.

"ஆடுவோமே பள்ளுப்பாடுவோமே'' என்ற விடுதலைப்பள்ளில், 'பார்ப்பானை அய்யனென்ற காலமும் போச்சே' என்ற பகுதியை அப்படியே விழுங்கிவிட்டது போல், ஏன் இவ்வடிகளையும் செய்யக்கூடாது? 'பார்ப்பானை அய்யனென்ற காலமும் போச்சே' என்பது பார்ப்பனர்களுக்கு இழிவையும், இது உயர்வையும் தருகிறதெனின், அது இழிவொடு போகும்; இது அவர்களை வெறுப்பதற்கே காரணமாக உள்ளதென்பதை அவர்கள் அறியாததுதான் நமக்கு வியப்பாக இருக்கிறது? ஏன் இந்த அடிகளை,

"அருந்தமிழ் நாட்டினர்
ஆண்மையோடியற்றும்
திருந்திய முயற்சிகள்
சிறந்துமிக் கோங்குக''

எனக் காலத்திற்கேற்ப மாற்றிக் கொள்ளலாமே? மூலபாடத்தை மாற்றுவதுதான் இவர்கள் குலத்தொழிலாயிற்றே.

இனி, 'ஜனகணமன'. எந்தத் தமிழ்ப் பிள்ளைகளுக்குப்பொருள் விளங்கும்? இசைவாணிகளும், இசைவாணர்களும் வேண்டுமென்றால் பொருள் விளங்காத பாடல்களை இசைக்காகப் பாடலாம். உணர்ச்சி கொள்வதற்கென்றே பாடவேண்டுமென வைத்திருக்கும் தேசியக் கீதத்தின் பொருள் விளங்காமல் எவ்வாறு சிறுவர்கள் உணர்ச்சி கொள்வர்? இதற்கு

# திருந்திய திருவிளையாடல் புராணம்.

★

கல்லூரியில் கால்வருடத்தேர்விற்கு அட்டவணை கொடுத்து விட்டனர். தமிழ்த்தேர்விற்கு முந்தின முதல் நாள் இரவு தமிழ் படிக்க ஆரம்பித்தேன். புறநானூறுடன் போராடி, மணிமேகலையுடன் மன்றாடி, வில்லிபாரதத்துடன் மல்லுக்கு நின்று, கம்பருடன் வம்புசெய்து, திருவள்ளுவரோடுசெருச்செய்து திருவிளையாடற் புராணம் வரும்போது ஒரு மணியாகிவிட்டது. முதல் பாட்டாகிய,

"பண் சுமந்த மறைநாடரும்
பொருள் பதஞ்சுமந்தமுடியார்மனம்
புண் சுமந்து துயர் தீர வந்த
பரிநரிகளாயடவி போன பின்
விண் சுமந்த சுர நதியெனப்
பெருகுவித்தவைகையிது
விடையவன்
மண் சுமந்து திருமேனி மேலடி
வடுச்சுமந்த கதையோதுவாம்."

என்ற பாட்டைப்படிக்கும் போது என் கண்ணீரைச்சுமந்தது, வாய் கொட்டாவியைச்சுமந்தது, தலை வலியைச் சுமந்தது, உடம்பு தூக்கத்தைச் சுமந்தது, மேஜை என் தலையைச்சுமந்தது.

* *

மதுரை மக்கள் பரபரப்புடன்காணப்பட்டனர். கடைவீதி வழியே நடந்து சென்று கொண்டிருந்தேன். "சீத்தலைச் சாத்தனார் அன்கோ பலசரக்கு மளிகை" முன் வந்தேன். அவருடன் சற்று பேசி விட்டு வரலாம் என்று கடைக்குள் நுழைந்தேன். கூலவாணிகச் சாத்தனாரைக்காணவில்லை. குமஸ்தா மட்டும் குனிந்து கணக்கெழுதிக்கொண்டிருந்தார். சாத்தனார், நீலகண்டன் கம்பனி நியூ எரா நிகண்டு நியூஎடிசன் வாங்க வேண்டுமென்றுகூறியிருந்தபடியால், நிகண்டு வாங்குவதற்கா சென்றிருக்கிறார் சாத்தனார் என்று வினவினேன். நிவாரணக்கடைக்கு லைசன்ஸ் எடுக்கச்சென்றிருக்கிறார் எனக்கூறினார். மேலும் மதுரை மந்திரி சபையில் பெரிய நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது என்று வருத்தமுடன் குமஸ்தா கூறினார். என்ன அப்படி நெருக்கடி? விவரமாய் சொல்லுங்கள் என்றேன். கீழ்க்கண்ட விஷயத்தைக் கூறினார்:-

பாண்டிய நாட்டுப் பிரதமர் அரிமர்த்தன பாண்டியர் அசுவம் வாங்கிவர உள்நாட்டிலாகா மந்திரி மாணிக்கவாசக அய்யரிடம் கொடுத்தனுப்பிய பணத்தை, அவர், பரமசிவம் பிள்ளை என்ற ஓர் மந்திரவாதியுடன் சேர்ந்து பணத்தை மோசடி செய்ய, இ. பி. கோ. 322-செக்ஷன்படி திருப்பெருந்துறை என்னுமிடத்தில் கைது செய்யப்பட்டு மதுரைக்குக் கொண்டுவரப்பட்டார். அவர்மேல் வழக்கு பதிவு செய்யப்பட்டு புதுஜெயிலில் ரிமாண்டில் வைக்கப்பட்டார். கூட்டுத்தோழர் பரமசிவம் பிள்ளை தன் "மெஸ்மரிசம்", "இப்னாட்டிசம்" வேலைகளால் சில நரிகளைக் குதிரைகளாக்கி மாணிக்கவாசக அய்யரைத் தந்திரமாக மீட்டார். குதிரைகள் பழையபடி நரிகளாக மாறிவிட்டன. அரசாங்கத்தை ஏமாற்றின குற்றத்திற்காக மறுபடியும் அவர் கைதியாக்கப்பட்டார். பரமசிவம் பிள்ளை மீது வாரண்ட் பிறப்பிக்கப்பட்டது. தலைமறைவாகத் திரிந்தார் பிள்ளை. தன் மந்திரவேலை பலிக்காது போகவே மதுரைக்கு அப்பாலுள்ள இரண்டு பெரிய கண்மாய்களை உடைத்து விட்டார். வைகை ஆற்றில் தண்ணீர் கடல்போல் பெருகி நாசம் விளைவிக்க ஆரம்பித்தது.

பி. டபிள்யூ. டி. யும், எம். எம். சி. யும் பொதுமக்கள் உதவியுடன் கரையோரத்தில் தடுப்புச் சுவர் கட்டத் தீர்மானித்தனர். அன்று சட்டசபையில் பிரச்னை விவாதிக்கப்பட்டு நாட்டு நலனை உத்தேசித்து வீட்டிற்கோர் ஆள் தேவை கரை கட்ட என்னும் சட்டம் நிறைவேறியது. பிட்டு விற்கும் வந்தி என்பவள் தனக்குப் பதிலாய்க் கரைகட்ட கூலியாள் கிடையாமல், போலீஸ்காரர்கள் வந்து துன்புறுத்தினால் என்ன செய்வது என்று கவலைப்பட்டு அழுதுகொண்டிருந்தாள். கரை கட்டுவதைப் பிடுங்கி, உடைப்பு உண்டுபண்ணி கெடுதிசெய்ய வேண்டுமென எண்ணினார், பரமசிவம் பிள்ளை. கூலியாள் போல் வேடம் தரித்து வந்தியின் பிரதிநிதியாய்க் கரைகட்டச் சென்றார். கூடையைத் தண்ணீரில் போடுதல், மண்ணைப் பலவாறு சிதறுதல், தண்ணீரில் விழுந்து நெடுந்தூரம்செல்லல் இவைகள் செய்தாரே தவிர வேலை ஒன்றும் செய்யவில்லை. இவருக்குரியபாகம் அடைபடாததால், மற்றவர்கள் கட்டிய கரையையும் தண்ணீர் அடித்துக்கொண்டு போகலாயிற்று. மேற்பார்வை செய்ய வந்த சர்க்கிள் இன்ஸ்பெக்டரும் அவரது சகாக்களும் பரமசிவம் பிள்ளை கரை அடைக்கும் இடத்திற்கு வந்தனர். கரை அடைபடாமல் இருப்பதற்கு அவர்கள் காரணம் கேட்டனர். பரமசிவம் பிள்ளை மௌனமாய் இருந்தார். அடிப்பதற்கு அவர்களுக்கு அதிகாரம் இல்லையாதலால் பிரதமருக்குப் 'போன்' பண்ணி நிலைமையைவிளக்கினார். பிரதமர் ஆற்றிற்கு வந்தார், ஆத்திரங்கொண்டார். தன் வாக்கிங் ஸ்டிக்கால் பரமசிவம் பிள்ளை முதுகில் ஓங்கி ஒரு அடி அடித்தார். பிள்ளை தப்பித்து ஓடினார். பின் தொடர்ந்த போலீசாருக்கு லத்திச் சார்ஜ் செய்ய பிரதமர் அரிமர்த்தனர் உத்தரவிட்டார். பரமசிவம் பிள்ளை வேகமாக ஓட ஆரம்பிக்கவே 'சூட்டிங் ஆர்டர்' கொடுக்கப்பட்டது. மூன்று வேட்டுகள் தீர்ந்தன. பரமசிவம் பிள்ளை ஆற்றில் குதித்து மறைந்து விட்டார்.

குமாஸ்தா இதைக்கூறி முடித்ததும், பேப்பர் விற்கும் பையன் பேப்பரை உள்ளே வீசி யெறிந்து விட்டுச் சென்றான். "தந்தி" பேப்பரில் கீழ்வரும் செய்தி பிரசுரமாயிருந்தது:—

பொதுஜனத்துரோகி பரமசிவம் பிள்ளையின் பித்தலாட்டம்! ஆற்றங்கரையில் அந்த அயோக்கியனின் புரட்டு! மறுபடியும் மாணிக்கவாசகர் கம்பி எண்ணுகிறார்! என்பது கொட்டை எழுத்துக்களில் பொறிக்கப்பட்டிருந்தது. பொது மக்களுக்கு அறிவிப்பு என்ற தலைப்பில், சிகப்புச் சீட்டித் துணியில் கருப்புப்புள்ளி போட்ட துணி உடுத்தி இருப்பான். கொண்டை முடிந்திருப்பான். பெண்கள் தலையில் அணியும் சிலேடு போல் பெரிய சைஸில் சந்திரன் ஸ்லேட் குத்தி இருப்பான். சிவந்த நிறம். நெற்றியில் இதற்கு முன் தன் திருட்டு

---

மாறாக வெறுப்பும், வேற்றுமையுணர்ச்சியுமன்றோ கொள்வர்? ஏன் இதையெல்லாம் எண்ணிப் பார்க்க அரசியலாருக்கு நேரமில்லாமல் போய் விட்டது?

எனவே, தமிழ் இனவுணர்ச்சியூட்டும் நல்ல தமிழ்ப்பாடச்சொல்வதே முறையாகும். மேலும், ஒரே பாடலைத்தினமும் பாடுதலில் பயனின்மையோடு பிள்ளைகளுக்குச் சலிப்புத்தட்டுவதற்கும்ஏதுவாகும். சர்க்கரைப் பொங்கலையே நாளும் தின்ன எந்த ஒருவனும்விரும்பான். நாடோறும் புதியது புகவிரும்பும் இளஞ் சிறார்களை ஒரே பாட்டையேநாடோறும் திருப்பித்திருப்பிப் பாடச்செய்வது அவர்கள் ஆர்வத்தைக் கெடுப்பதோடு, ஆர்வத்தை வளர விடாமல் அடக்கியாள்வதுமாகும். ஆகவே, நல்ல தமிழுணர்ச்சியூட்டும் தமிழ்ப்பாட்டுகளாகப் பாடிக் கொள்ளும்படி விட்டு விடுதலே ஏற்புடைத்தாகும் என்பதை அன்புடன் கூறிக்கொள்கின்றோம்.

ரோஜா முத்தையா

திருவிளையாடலை காண்பிக்கையில் போலீசாரால் சுடப்பட்டு நெற்றியில் ஆழமான தழும்பு இருக்கும். அது நெற்றிக்கண் என்றுபரமசிவம்பிள்ளை ஏமாற்றுகிறான். இவனைப் பிடித்துக் கொடுப்போர்களுக்கு 1000 ரூபாய் இனாம் என்று இருந்தது.

வேறு ஒரு பக்கத்தில் நேற்று இரவு ஆற்றோரமைதானத்தில் பிரதமர் தலைமையில் 7-30க்குஒருபொதுக் கூட்டம் நடைபெற்றது. அவர்பேசியதாவது. நமது சுதந்தர மதக்கலப் பற்ற குடியரசு சமீபத்தில் தான் நிறுவப்பட்டது. அதற்குள் இத்தகைய சூழ்ச்சி நடப்பது கண்டு வருந்துகிறேன். மந்திரிசபை அமைக்கும் போது எனது நண்பர்கள் ஒரு பார்ப்பனரை உள்நாட்டு இலாக்காவிற்கு போடவேண்டாமென எவ்வளவோ கூறினர். இப்போது 'உணர்கிறேன் அவர்கள் கூற்றை. பின்நிதிமந்திரி வெற்றிவேல் செழியன் பேசினார். அவர் கூறியதாவது. இவ்வருடம் பட்ஜட் நல்லமுறையில் தீரும் என நினைத்தேன். குதிரை வாங்கச் சென்ற காரியம் அசம்பாவிதமானதால் 75 லட்சம் துண்டு விழுகிறது. இத்தகைய கெடுமதிசெய்யும் துரோகிகளை ஒழிப்பதில் அரசாங்கம் சிறிதும் பின் வாங்காது. அவர் மேலும் கூறினதாவது. மாணிக்கவாசக அய்யரை விசாரிக்க நீதிபதி நெடுஞ்செழியனைத் தலைமையாகக்கொண்டஒருஸ்பெஷல் கோர்ட், ஏற்படுத்தியுள்ளது. இப்பொழுது குற்றப்பத்திரிகை தயாராகுகிறது. விரைவில் விசாரணை ஆரம்பமாகும் என்று அவர்கூறி முடித்தவுடன் கூட்டம் இனிது முடிந்தது.''

* *

திடீர் என்று விழித்துக்கொண்டேன். நன்றாகப்பொழுதுபுலர்ந்துவிட்டது. 10-மணிக்குத் தேர்வு. திருவிளையாடற்புராணம் படிக்கவில்லையே அதில் வினாக்கள் வந்தால் என்ன செய்வது என்ற கவலை வாட்டத் தொடங்கியது. கனவிலே கண்ட உண்மைத் திருவிளையாடற் புராணத்தைத்தான் எழுதவேண்டுமென்று நினைத்தேன்.

சே. திருஞானசம்பந்தம்.

★

## முடியணிந்தால் ஆவேசமா?

திருவள்ளூர் தாலுகா கடம்பத்தூர் கிராமத்தில் பெரிய வீதியில் இருக்கும் பெருமாள் கோவிலில் ஆண்டுதோறும் புரட்டாசி மாதம் 3 வது வாரச்சனிக்கிழமையன்று, பெருமாள் வீதி வலம் வந்த பின் நாடகம் ஒன்று நடைபெறுவது வழக்கம். அது போல் இந்தஆண்டில் 2—10—48ம் நாள் இரவு ஊர்வலம் முடிந்து இரணியவிலாசம்என்ற நாடகம் நடை பெற்றது.

நரசிங்க ஆவேசம் வருவது என்பது வெறும் புரட்டு என்றும் மக்களை ஏமாற்றும் பித்தலாட்டமே என்றும் திராவிட இயக்கத் தோழர்கள் பேசிக்கொண்டதைக்கேட்ட பக்த சிரோன்மணிகள் 'நரசிங்கப் பெருமாள்முடி' யணிந்து கொண்டால் கட்டாயம் ஆவேசம் வந்தே தீரும் எனச் சாதித்தனர். மேலும் உங்களில் எவரேனும் முடியையணிந்து கொள்ள முன்வாருங்கள், நிச்சயமாக எங்களால் வரவழைக்கமுடியும் எனவும் துள்ளினார்கள்.

சவாலை யேற்று, தோழர் தீனதயாளன் என்பவர் முன்வர, விடியற்காலையில் முடியையணிவித்து அமரச் செய்து, பக்த சிரோன்மணிகளும் பிரகலாதனும் சூழ்ந்திருந்து, தேங்காய் உடைத்து கற்பூரம் கொளுத்தி சுமார் 2-மணி நேரம் வரை துதிசெய்தும் ஆவேசம் வரவில்லை.

ஆவேசத்தைக் காணாத பக்த சிரோன்மணிகள் வெட்கித் தலை குனிந்தனர். ஆனால் முடியணிந்தால் ஆவேசம் வரும் என்ற மூடநம்பிக்கையை இனியேனும் கைவிட்டுவிடுவார்களா?

கோ. த. கன்னியப்பன்.

சோளபுரத்தில்
குடி அரசு ஏஜண்டு.
N. B. M. அபுபக்கர்,
நியூஸ் ஏஜண்டு, சோளபுரம்.




## குடி அரசுப்பதிப்பக வெளியீடுகள்.

★

| | | | |
|---|---|---|---|
| தத்துவவிளக்கம் | 0 | 12 | 0 |
| புது ரஷ்யா | 0 | 8 | 0 |
| இந்தியாவின் குறைபாடுகள் | 0 | 8 | 0 |
| பெரியார் ஈ. வெ. ரா. வாழ்க்கை வரலாறு. (ஆங்கிலம்) | 0 | 8 | 0 |
| நமக்கு வேண்டியது எது? சமதர்ம ராஜ்யமா? சுயராஜ்யமா? | 0 | 6 | 0 |
| கர்ப்ப ஆட்சி | 0 | 6 | 0 |
| பெரியார்பெருந்தொண்டு | 0 | 6 | 0 |
| வெளியேறு | 0 | 6 | 0 |
| பகுத்தறிவு அல்லது மரணசாஸனம்2ம்பாகம் | 0 | 4 | 0 |
| பொதுவுடைமைத் தத்துவங்கள் | 0 | 4 | 0 |
| புராண ஆபாசங்கள் (தருமபரீட்சை) | 0 | 4 | 0 |
| மதப்புரட்சி | 0 | 4 | 0 |
| வால்டையரின் வாழ்க்கைச் சரிதை | 0 | 4 | 0 |
| கார்ல் மார்க்ஸ் | 0 | 4 | 0 |
| சமதர்ம உபன்யாசம் | 0 | 4 | 0 |
| அப்பரும் திருஞான சம்பந்தரும் | 0 | 3 | 0 |
| சோஷியலிசம் | 0 | 3 | 0 |
| இலங்கை உபன்யாசம் | 0 | 3 | 0 |
| இராமாயணப் பாத்திரங்கள் | 0 | 3 | 0 |
| மேல்நாடும், கீழ்நாடும் | 0 | 3 | 0 |
| உழைப்பாளிக்கு ஏன் இவ்வுலகம் இல்லை? | 0 | 3 | 0 |
| இன இழிவு ஒழிய இஸ்லாமே நன் மருந்து! | 0 | 2 | 0 |
| இதிகாசங்கள் புகட்டும் நீதி | 0 | 2 | 0 |
| உண்மைத் தொழிலாளி யார்? | 0 | 2 | 0 |
| திருச்சிப் பிரசங்கம் | 0 | 2 | 0 |
| ராமலிங்க சுவாமி பாடல் | 0 | 2 | 0 |
| திராவிடர்-ஆரியர் உண்மை | 0 | 2 | 0 |
| தமிழ் இசை-நடிப்புக் கலைகள் | 0 | 1 | 0 |

கிடைக்குமிடம்:-

**நாதன் கம்பெனி லிமிடெட்,**
கச்சேரி வீதி, ஈரோடு.

Edited, Printed and Published by N. Karivaradaswamy at the Tamilian Press Old No. 42, New No. 59, Cutcherystreet. ERODE